
பொழிவு - 17
குவிப்பு - 07
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூலை 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

# முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறைகளுக்கு பாதுகாப்புத் தரப்பினரே காரணம்

## தமிழ் சிவில் சமூக அமையம் குற்றச்சாட்டு



அழுத்கமவில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையைத் தமிழ் சிவில் சமூக அமையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்தச் சம்பவமானது ஒரு குறிப்பிட்ட அமைப்பு தொடர்பானதோ அல்லது ஒரு கட்சி தொடர்பானதோ அல்ல எனவும் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தப் பிரச்சினை இலங்கையில் வேரோடிப்போன பிரச்சினை என்பதுடன், இதில் மாற்றம் வராவிட்டால் அளுத்கமவில் நடந்தவை இனியும் தொடராது என்று நம்பிக்கைகொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது. தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பில் மன்னார் மாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## காரை நிறுத்தி இறங்கி விசேட தேவையுள்ள பெண்ணை ஆசீர்வதித்த திருத்தந்தை பிரான்சிஸ்





நெடுஞ்சாலையொன்றில் திருத்தந்தை பிரான்சிஸ் காரில் செல்வதைக் காண்பதற்காகத் தனது குடும்பத்தினர் அருகில் தள்ளுவண்டியொன்றில் படுத்தவாறு காத்திருந்த விசேட தேவையுள்ள ஒரு பெண்ணை தனது காரை நிறுத்தி இறங்கி திருத்தந்தை ஆசீர்வதித்துள்ளார்.

தென் இத்தாலியிலுள்ள கலபிறியா கிராமப் பகுதியில் இடம்பெற்ற இந்த மனதை நெகிழவைக்கும் சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

கலபிறியாவிலுள்ள கஸனோ அல்லோஜொனியோ எனும் இடத்தில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய திருத்தந்தையைக் காணும் ஆவலுடன் நெடுஞ்சாலையில் இரு மருங்கிலும் கூடியிருந்த மக்கள் மத்தியில் மேற்படி விசேட தேவையுடைய பெண்ணும் இருந்தார். ரொபேர்டா என்ற அந்த பெண்ணின் உறவினர்கள், "திருத்தந்தையே, தயவுசெய்து நின்று தேவதையொருவரைப் பாருங்கள்" என்று பொருள்படும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

அந்தப் பதாகைகளைப் பார்த்ததும் தனது காரை நிறுத்தும்படி பணித்த திருத்தந்தை, காரிலிருந்து இறங்கி விசேட தேவையுடைய குறிப்பிட்ட அந்தப் பெண்ணின் அருகே சென்று குனிந்து அவரது நெற்றியிலே முத்தமிட்டு ஆசீர்வதித்தார்.

திருத்தந்தையின் இந்தக் கனிவான செயலால் அந்தப் பெண்ணும் அவரது உறவினர்களும் ஆனந்த மேலீட்டால் கண்ணீர் சிந்தினர். ரொபேர்டா என்ற அந்த விசேட தேவையுள்ள பெண் சுவாச உபகரணத்தின் உதவியுடனேயே உயிர்வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 48வது உலக தொடர்பாடல் தினம்

**48th World Communication Day**

**யூலை 13 ஞாயிறு**





ஒவ்வொரு ஆண்டும் யூலை மாதம் 2வது ஞாயிறு உலக தொடர்பாடல் தினமாக உலகத் திருச்சபையால் சிறப்பிக்கப்படுகின்றது. இலங்கை நாட்டிலும் அனைத்து மறைமாவட்டங்களிலும் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இத்தினத்தை மன்னார் மறைமாவட்டத்திலும் சிறப்பாகக் கொண்டாட மன்னார் மறைமாவட்டச் சமூகத்தெடர்பு அருட்பணி மையமான 'கலையருவி' ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. யூலை மாதம் 13ஆம் திகதி ஞாயிறு தினம் மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் உலக தொடர்பாடல் தினமாகக் கொண்டாடப்படும். இத்தினத்திற்கான சுவரொட்டிகள் (போஸ்ரர்கள்), வழிபாட்டுக் குறிப்புகள் (முன்னுரை, வாசகங்கள், மறையுரைக் குறிப்புகள், விசுவாசிகள் மன்றாட்டு போன்றவை) கலையருவியினால் பங்குகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உலகக் கால்பந்து போட்டிகள் திருத்தந்தையின் ஒளி - ஒலிச் செய்தி



மொழி, கலாச்சாரம், நாடு என்ற எல்லைகளையெல்லாம் கடந்து, கால்பந்தாட்டத்தால் இணைக்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களையும், அவர்களுக்கு ஊக்கமளிக்கும் அனைத்து இரசிகர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

கடந்த யூன் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் ஒரு மாதம் பிரேசில் நாட்டில் நடைபெறும் உலகக் கால்பந்து போட்டிகளின் துவக்க நாளையொட்டி அந்நாட்டில் உள்ள "Rete Globo" என்ற தொலைக்காட்சிக்கு தான் அனுப்பியுள்ள ஒளி – ஒலிச் செய்தியிலேயே திருத்தந்தை இவ்வாறு கூறியுள்ளார்.

கால்பந்தாட்டம் வெறும் விளையாட்டு மட்டுமல்ல; அது உரையாடல், புரிந்துகொள்ளுதல் ஆகிய உயர்ந்த வழிகளை மனித குடும்பத்திற்குச் சொல்லித்தரும் ஓர் அரிய வாய்ப்பு என்று திருத்தந்தை தன் செய்தியின் துவக்கத்தில் கூறியுள்ளார்.

பொதுவாகவே, எந்த ஒரு விளையாட்டும், விளையாட்டுத் திடலில் நடைபெறுவது மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் விளையாட்டின் தாக்கங்களை நாம் உணர்கிறோம் என்று திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார்.(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)


## சுதேச குருக்கள் துறவியர் ஞாயிறு

**Indigenous Clergy/ Religious Sunday**

**யூலை 27 ஞாயிறு**


"நீ இல்லை என்றால், யார் விசுவாசத்தின் விதையை விதைப்பது"

**"If not you, who will sow the seed of faith"**



தமக்குப் பணிபுரியும் சுதேச (சொந்த நாட்டை, பிரதேசத்தைச் சேர்ந்த) குருக்கள், துறவிகளின் கல்விக்காகவும், உருவாக்கத்திற்காகவும் இந்த நாளில் தங்கள் செபங்களையும், தாராள நன்கொடைகளையும் வழங்குவது இறைமக்களின் கடமையாகும்.

## தலைசிறந்த திருச்சபை வரலாற்றாய்வாளரும், கண்டி குருத்துவக் கல்லூரிப் பேராசிரியருமான அருட்தந்தை கெறே இறைபதம்!



தலைசிறந்த திருச்சபை வரலாற்றாய்வாளரும் கண்டி குருத்துவக் கல்லூரியின் பேராசிரியருமாக விளங்கிய அருட்தந்தை மாட்டின் கெறே (Rev. Fr. Martin Quere) அமதி அடிகளார் கடந்த யூன் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் இறைபதமடைந்தார்.

கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக கற்பித்தல் பணியில் ஈடுபட்டு பொன்விழாக் கண்டவரான அடிகளார் இலங்கைத் திருச்சபை வரலாற்றில் இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவராவார்.

குருப்பட்டம் எடுத்து ஆறு மாதத்தில் பிரான்ஸ் நாட்டிலிருந்து மிஷனரியாக 1948ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த இவர் இறக்கும்வரை இங்கேயே பணிபுரிந்தார்.

கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் கல்விகற்ற குருக்கள் அனைவரும் இவரிடம் கல்வி கற்றவர்களே. திருச்சபை வரலாறு, இஸ்லாம் ஆகிய பாடங்களைச் சிறப்பாக இவர் கற்பித்து வந்தார். பிரமாணிக்கமுள்ள இந்த இறை ஊழியரின் ஆன்மா இறைவனில் அமைதியடைவதாக!

## இயேசு பேசிய மொழி என்ன?

மத்திய கிழக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் மேற்குக் கரைப்பகுதியில் முன்னேற்பாடில்லாமல் ஆங்காங்கே வழிபாடுகளை நடத்தியிருந்தமை சிறிது சர்ச்சைகளை ஏற்படுத்தவே செய்தது.

இருந்தாலும் திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கு இடையில் ஏற்பட்ட ஒரு வாக்குவாதம் நகைச்சுவையான முரண்பாடாகவும் வெளிப்பட்டது. அது இயேசு உயிருடன் நடமாடிய காலத்தில் அவர் பேசியிருக்கக்கூடிய மொழி பற்றியதாகும். ஜெருசலேமில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு, "இயேசுநாதர் இங்கு இருந்தார். இந்த மண்ணில் அவர் ஹீப்ரு (எபிரேய) மொழியில் பேசினார்" என்று கூறினார். யூத மதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் இடையில் உள்ள நெருக்கத்தை எடுத்துக்காட்டுவது அவரது நோக்கமாக இருந்தது. அதற்குத் திருத்தந்தை பிரான்சிஸ் சிரித்துக்கொண்டே, "அவர் அரமாய்க் மொழியில் பேசினார். இருந்தாலும் அவருக்கு ஹீப்ரு (எபிரேய) மொழியும் தெரிந்திருந்தது." என்று திருத்தினார்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரான டாக்டர் செபஸ்திபியன் டிராக் என்பவர் இதுபற்றிக் கூறுகையில் "இரண்டு பேருமே சரியானதைத்தான் கூறியிருக்கிறார்கள்" என்றார். "அறிஞர்களதும் வேதநூலாளர்களதும் மொழியாக ஹீப்ரு இருந்துள்ளது. அதேசமயம் இயேசு அராமாய்க் மொழியையும் அன்றாட உரையாடல்களுக்கு பயன்படுத்தியிருக்க முடியும்" என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## இறை அழைப்பை இனம் காண்போம்

பணியில்லா வாழ்வு கனியில்லா மரம் போன்றது. ஆதியிலிருந்து இந்தத் தேதிவரை ஆண்டவரும் அவருடைய அடியார்களும் பணிசெய்வதையே பலமாகவும் பாலமாகவும், வரமாகவும் வழியாகவும் கருதி வந்துள்ளனர். இதை இயேசு நன்கு உணர்ந்திருந்தார். தாம் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் ஓய்வின்றி உழைத்தார். அதையே தம் சீடர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே வந்தேன் என்று வெளிப்படையாகவே இயேசு சொன்னார்.

### *உலகத்தைத் துறப்பது ஏன்?*

"ரபி நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்" (மாற் 9:5). இறைவனோடு கொண்டுள்ள உறவிலே பிறக்கின்ற அமைதியும் ஆறுதலும் அவற்றை என்றுமே உரிமையாக்கிக்கொள்ளும் ஆவலை தட்டியெழுப்புகின்றன. இத்தகைய ஆவலால் இன்பமுற்று திருத்தூதர் பேதுரு பாடிய ஆனந்த கானம்தான் இது. எங்கு இயேசு தங்குகிறாரோ அங்கு அவரோடு தங்குவதே சீடர்கள் மூவரதும் சித்தமாக இருந்தது. "கூடாரம் மூன்றினை அமைத்துவிடு உனது ஏக்கம் நிறைவு பெறட்டும்" என இயேசு கூறவில்லை. மாறாக இயேசு அவர்களை மலையிலிருந்து கீழே அழைத்து வருகிறார்; மக்களைச் சந்திக்கச் செய்கிறார். இறைவனோடு கொள்கின்ற உறவு மக்களை மறக்க, தன்னலத்தை வளர்க்க உதவக்கூடாது. உலகத்தைவிட்டு ஓடுகின்ற ஓட்டம் சிலவேளைகளில் இறைவனைவிட்டே ஓடுகின்ற ஓட்டமாகவும் இருக்கலாம். ஏனெனில் இறைவன் உலகில் இருக்கிறார். ஒரு சீடன் குருவைப்பார்த்து கேட்டான் "போதிப்பதற்கும் போதனையின்படி வாழ்வதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?" குரு சொன்னார், "போதிப்பவர் ஒளியைக்கொண்டு வழிகாட்டுபவர்; போதனையின்படி வாழ்பவர் ஒளியாக இருப்பவர்."

### *குடும்பமே ஆரம்பக் குருமடம்*

குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை! ஆன்மீக ஆழம் நிறைந்த, விசுவாச வாழ்வை வாழுகின்ற குடும்பங்களிலிருந்துதான் இறை அழைத்தல்கள் உருவாக முடியும். குடும்பங்களே சிறந்த அழைத்தல்களுக்கான விளைநிலமாக இருக்க முடியும். இன்று தொழிநுட்பம் விரைந்து வளர்ந்து வருகிறது. நாகரீக நடைமுறைகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே போகிறது. பொழுதுபோக்குச் சாதனங்கள் ஆபாசத்தையும் அசிங்கத்தையும் கக்கிக்கொண்டே இருக்கின்றன. போதைப்பொருள் பாவனை இளையோரை கவர்ந்திழுக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் இறையழைத்தலைப்பற்றிச் சிந்திப்பது சிலவேளை வேடிக்கையாக வினோதமாக இருக்கலாம்.

### *ஐரோப்பாவில் அருகிவரும் அழைத்தல்கள்*

ஐரோப்பிய நாடுகளில் இன்று குடும்ப வாழ்வு குலைந்து வருகிறது. இதனால் குடும்பங்களிலிருந்து வரவேண்டிய அழைத்தல்களும் அருகிவருகின்றன. பல ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் அழைத்தல்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் குறைந்துவிட்டது. குருமடங்களும் சந்நியாச இல்லங்களும் வெறிச்சோடிக்கிடக்கின்றன. மேலை நாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வரும் குருக்கள் துறவிகள் நம் நாட்டு சிறிய பெரிய குருமடங்களில் மாணவர்கள் நிரம்பி வழிவதைக்கண்டு ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கின்றனர்.

### *பங்குத்தந்தையரின் பங்களிப்பு*

பங்கு மட்டத்தில் இளைய உள்ளங்களில் உறைந்திருக்கும் இறை அழைத்தல்களை இனம்காணும் பாரிய பணி பங்குத்தந்தையருக்கே உண்டு. கிறிஸ்தவ விசுவாசம்மிக்க குடும்பப் பின்னனி, கல்வி, கட்டுப்பாடான தூயவாழ்வு போன்ற நல்ல விழுமியங்களைக்கொண்ட இளம் உள்ளங்களில் அழைத்தலின் விதையை விதைக்கும் வளர்க்கும் கடமை பங்குத்தந்தைக்கே உரியது. அனைத்திற்கும் மேலாக தனது முன்மாதிரிகையான வாழ்வினால் இளம் உள்ளங்கள் இறை அழைத்தலின்பால் ஆர்வத்தையும் ஆசையையும் வளர்க்கும் வண்ணம் பங்குத்தந்தை செயலாற்ற வேண்டும்.

### *அழைப்பை இனம்காண ஆதரவு தேவை*

சிறுவயது முதல் அடிமனதில் வேர்பாய்ந்திருக்கும் அழைத்தலின் விதையை இனம்கண்டு வளர்த்தெடுக்க உரிய ஊக்குவிப்புத் தேவை. தேவ அழைத்தல் ஒன்றுகூடல்கள். பயிற்சிப்பாசறைகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், படங்கள், நாடகங்கள், தெருக்கூத்துக்கள் போன்றவை வழியாக அழைப்பின் குரலை இளையோர் இனம்காண துணை புரியலாம். ஊடகங்களில் நிகழ்சிகளையும் ஆக்கங்களையும் வெளியிட்டு அழைப்பில் ஆர்வத்தைத் தூண்டலாம். இளையோரில் உள்ளத்தில் கேட்கும் அழைப்பின் குரலை அவர்கள் இனம்காண ஆதரவு கொடுப்போமா?

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்*

## உலகக்கோப்பை கால்பந்தாட்டப்போட்டிக்கு பிரேசில் அரசு செலவிடும் தொகைக்கு ஆயர்கள் எதிர்ப்பு



பிரேசில் நாட்டில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கு அரசு அதிகத் தொகையைச் செலவிடுவது குறித்து தங்கள் எதிர்ப்பை அந்நாட்டு ஆயர்கள் வெளியிட்டுள்ளனர். கல்விக்கும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ள வேளையில், உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கு அரசு பெருந்தொகையைச் செலவிடுவது குறித்து ஆயர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த விளையாட்டுப்போட்டி நடக்கும் நாட்களில் இடம்பெறவுள்ள பாலியல் சார்ந்த குற்றங்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆயர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

யூன் மாதம் 12 முதல் யூலை 13 வரை பிரேசில் நாட்டில் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது. ஏறக்குறைய 8 இலட்சம் இரசிகர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து இந்தப்போட்டியைக் கண்டுகளிக்கின்றனர்.




## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி - 2014
### ஆவணி

01 - புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்.
03 - பெரியகட்டு தூய அந்தோனியார் திருவிழா
- மரிய மாதா திருவிழா - மாளிகைத்திடல்
05 - தூய அந்தோனியார் திருவிழா - பெரிச்சார்கட்டு
06 - மடுத்திருப்பகுதியில் ஆவணித் திருவிழாவிற்கான கொடியேற்றம் - நவநாள் ஆரம்பம்.
- குழந்தை இயேசு ஆலயம், ஆலங்குளம்.
10 - தூய லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்
15 - மடுமாதா திருத்தல திருவிழா - கடன் திருநாள்
22 - தூய பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல்
- வேதசாட்சிகளின் இராக்கினி திருவிழா - தோட்டவெளி
- அன்னைதிரேசா மறைபரப்பு அருட்சகோதரிகளின் விழா
- தூய வேளாங்கண்ணி அன்னை திருவிழா - தம்பனைக்குளம்.
24 - புனித பர்த்தலமேயு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25 - கிறிஸ்த அரசர் திருவிழா - பெரியமடு
- புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
- அருளாளர் அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
26 - தூய பரலோக அன்னை திருவிழா - முள்ளிக்குளம்.
- அளவக்கை பங்குத் திருவிழா
- அன்னை திரேசா - புதிய கோயில்குளம்.
27 - தூய அந்தோனியார் திருவிழா - பள்ளவெட்டுவான்
31 - புனித சவேரியார் திருவிழா - ஆட்காட்டிவெளி, சுந்தரபுரம்.

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம், 5வது சனி கணவன், மனைவி தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## சாத்தான் நம்மிடையே வெறுப்பை விதைப்பதில் குறியாக இருக்கிறான்
### திருத்தந்தை பிரான்சிஸ்



இறைவனே அன்பு! இந்த அன்பை உணராத சாத்தான் நம்மிடையே வெறுப்பை விதைப்பதில் குறியாக இருக்கிறான் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த யூன் மாதம் 15ஆம் திகதி வழங்கிய மூவேளை செப உரையில் கூறினார்.

அன்றைய தினம் கொண்டாடப்பட்ட மூவொரு இறைவன் திருவிழாவையொட்டி, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலய வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கும்போதே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

'வெறுப்புகொண்ட கிறிஸ்தவர்' என்பது ஒன்றோடொன்று பொருந்தாத இரு வார்த்தைகள் என்று கூறிய திருத்தந்தை, கிறிஸ்தவர் என்ற வார்த்தையே 'அன்பு செய்பவர்' என்ற பொருள் கொண்டது என்று சுட்டிக்காட்டினார்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## பிழை திருத்தம்




கடந்த மாத மன்னாவில் 1ஆம் பக்கத்தில் மன்னார் மறைமாவட்டத்தின் மடுமாதா சிறிய குருமடத்தின் 25 வருட யூபிலி விழா செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது 15ஆம் திகதி என வரவேண்டும். தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதானவர்களை ஒதுக்கிவைப்பது அநீதியானது, அது சரிசெய்ய முடியாத இழப்பும் ஆகும்

## திருத்தந்தை பிரான்சிஸ்

சில நேரங்களில் நாம் வயதானவர்களை ஒதுக்கி வைக்கின்றோம், ஆனால் அவர்கள் விலை மதிப்பில்லாத சொத்து, அவர்களை ஒதுக்கிவைப்பது அநீதியானது மற்றும் சரிசெய்ய இயலாத இழப்பாகும் என கடந்த யூன் மாதம் 17ஆம் திகதி அன்று தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தான் திருத்தந்தையாக பணியேற்றதிலிருந்து இளையோர் மற்றும் வயதானவர்கள்மீது மிகுந்த அக்கறை காட்டி, அவர்க்ளின் நலனில் அதிக கவனம் செலுத்துமாறு வலியுறுத்திவருவது குறிப்பிடதக்கது.

மேலும் வயதானவர்களின் உரிமைகள் மீறப்படுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் உலக நாள் யூன் மாதம் 15ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இன்று உலகில் 4 முதல் 6 விழுக்காட்டு வயதானவர்கள் வீடுகளில் பல வழிகளில் அவமதிக்கப்படுகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. பல நாடுகளில் வயதானவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவரும் நிலையில் இந்த மூத்த குடிமக்கள் அனுபவிக்கும் உரிமை மீறல்கள் அதிகரிக்கும் என்ற அச்சமும்



வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வயதானவர்களின் உரிமைகள் குறித்த புதிய ஐ.நா. உடன்பாடு ஒன்று கொண்டுவரப்படுமாறு வயதானவர்களுக்கு உதவும் சர்வதேச அமைப்பு (Help Age International) வலியுறுத்தி வருவதாக அதன் டான்சானியக் கிளை இயக்குனர் அம்லஸற் ருவோட்றஸ் (Amleset Tewodros) வத்திக்கான் வானொலியில் தெரிவித்தார்.

## தனிநாயகம் அடிகளாருக்கு யாழ்ப்பாணத்தில் சிலைவைக்க முயற்சி



தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருக்கு யாழ்ப்பாணத்தில் சிலை நிறுவும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் யாழ். பிரதான வீதியில் மடத்தடிச் சந்தியில் பிரதான தண்ணீர்த் தாங்கிக்கு முன்பாக தனிநாயகம் அடிகளாரின் சிலை வைப்பதற்கான கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சமய, சமூகப் பெரியார்களுக்கு யாழ். நகரில் சிலைகள் அமைப்பதென யாழ். மாநகர சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய சிலை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தனிநாயகம் அடிகளாரின் பிறந்ததின நூற்றாண்டு கடந்த வருடம் நிறைவடைந்த நிலையில் சிலை அமைத்து கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தை பயணிக்கின்ற இடங்களை பார்க்க பாதுகாப்பு அதிகாரிகள் வருகை

திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர். திருத்தந்தையின் 15 மெய்ப்பாதுகாவலர்களே இவ்வாறு இலங்கை வரவுள்ளனர்.

திருத்தந்தை பயணம் செய்ய உள்ள இடங்கள் மற்றும் கலந்துகொள்ளவுள்ள நிகழ்வுகள் தொடர்பில் அவதானிக்கும் நோக்கில் இந்த மெய்ப்பாதுகாவலர்கள் இலங்கைக்கு வருகின்றனர். திருத்தந்தை இலங்கை வருகையின்போது முதலாவதாக நீர்கொழும்புக்குச் செல்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## திருத்தந்தை பிரான்சிஸ் பிறந்து வளர்ந்த வீடு 'வரலாற்றுத் தளமாக' அறிவிப்பு



ஆர்ஜென்டினா நாட்டின் புவனோஸ் ஐரெஸ் மாநகரில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிறந்து வளர்ந்த வீட்டை "வரலாற்றுத் தளமாக" அறிவித்துள்ளது புவனோஸ் ஐரேஸ் மாநகராட்சி. இந்நிகழ்வில் வாக்களித்த புவனோஸ் ஐரேஸ் மாநகராட்சி உறுப்பினர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏழைகள்மீது பரிவன்புமிக்கவராக, இன்றைய சமூகத்தின் பிரச்சினைகள் குறித்து அக்கறைகொண்டவராக, ஒரு தாழ்மையான திருத்தந்தையாக இருக்கிறார் என்று கூறியுள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து புவனோஸ் ஐரேஸ் மாநகரிலுள்ள அவரது வீடு சுற்றுலாப்பயணிகளும், கத்தோலிக்கரும் விரும்பிச்செல்லும் இடமாக மாறிவருகின்றது என்று ஊடகங்கள் கூறுகின்றன.

ஆர்ஜென்டினா நாட்டின் சட்டப்படி, வரலாற்றுத்தளமாக அறிவிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ மாற்றம்செய்யப்படவோ அல்லது இடிக்கப்படவோ கூடாது. இப்படிச் செய்வதற்கு அந்நாட்டின் கலாசார அமைச்சகத்தின் முன்-அனுமதி தேவை.

## அருள்பணியாளர் பிரேம்குமாரை விடுவிப்பதற்கு முயற்சி



ஆப்கானிஸ்தானில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இந்திய இயேசுசபைக் குருவான அருள்பணியாளர் அலெக்சிஸ் பிரேம்குமார் அவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அருள்பணியாளருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படக்கூடாது என்பதே தங்கள் தலையாய நோக்கம் என்றும், இந்திய உயர் அதிகாரிகள் காபூல் நகரில் ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுடன் எந்நேரமும் தொடர்பில் உள்ளனர் என்றும் பிரதமரின் கடிதம் கூறியுள்ளது.

கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி அன்று கடத்தப்பட்ட 47 வயதான இயேசு சபை அருள்பணியாளர் பிரேம் குமாரைக் கடத்திச்சென்றவர்கள் யார் என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை என்றும், இந்தக் கடத்தல் தொடர்பாக மூன்று தலிபான்கள் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் NDTV என்ற இந்திய ஊடகச் செய்தியொன்று கூறுகிறது.


## அன்புக் கன்னியர் சபைக்கு புதிய மாகாண முதல்வர்

இலங்கை அன்புக் கன்னியர் சபையின் புதிய மாகாண முதல்வராக (The provincial Superior of the Congregation of the Sisters of Charity of Jesus and Mary of Sri Lanka) அருட்சகோதரி தீபிக்கா சில்வா அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவருடைய ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் றீற்றா அந்தோனிப்பிள்ளை, ஜெயக்கொடி விசுவாசம், பிதீப்பிக்கா பெரேரா, மரியா சமரநாயக்க, அஜித்தா பெனாண்டோ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த யூன் மாதம் 7ஆம் திகதி இவர்கள் தமது பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.


## செபமாலைத்தாசர் சபை அருட்சகோதரர் இறைபதம்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் தேவதாஸ் விமலதாசன் அவர்கள் கடந்த யூன் மாதம் 21ஆம் திகதி இறைபதமடைந்தார். 23.06.2014 திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் இரங்கல்கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அச்சுவேலியில் அமைந்துள்ள செபமாலை மாதா ஆச்சிரமத்திற்கு (அன்பகம்) அவரது உடல் எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின்னர், பி.ப 3.00 மணிக்கு இரங்கல் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அங்கு நல்லடக்கம் நடைபெற்றது. இவரின் ஆன்மா அமைதிபெறச் செபிப்போம்.


## குருத்துவப் பணிவாழ்வில் வெள்ளிவிழாக்காணும் யாழ் குருக்களை வாழ்த்துகின்றோம்



அருட்பணி.
J. B. அன்ரனிதாஸ்
*யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளர்.*




அருட்பணி.
A. F. பெனற்
*ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக மையத்தின் இயக்குநர்*




அருட்பணி.
இயூஜின் பிரான்சிஸ்
*இளவாலை மறைக்கோட்ட முதல்வர், பண்டத்தரிப்பு பங்குத்தந்தை*



அருட்பணி.
C. J. அன்ரனிபாலா
*அச்சுவேலிப் பங்குத்தந்தை*



அருட்பணி.
T.A. தவராஜசிங்கம்
*கனடா*



அருட்பணி.
M. டேவிற்
*அமெரிக்காவில் உயர்கல்வி*

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு அருட்பணியாளர்கள் இவ்வாண்டு யூன் மாதம் 19ஆம் திகதி தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் கண்டார்கள். அருட்பணியாளர்கள் ஜே. பி. அந்தோனிதாஸ், ஏ. எவ். பெனற், எஸ். யூஜின் பிரான்சிஸ், சி. ஏ. அன்ரனிபாலா, ரி. ஏ. தவராஜசிங்கம், எம். டேவிட் ஆகியோரே வெள்ளி விழாக்கண்ட அருட்தந்தையர்கள் ஆவர். குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக்கண்டு இறைவனுக்கு நன்றிகூறும் இவர்களோடு சேர்ந்து நாமும் இறைவனுக்கு நன்றிகூறுவோம். இந்த அருட்தந்தையர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினரின் யூபிலி நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமில்நகர் வை. கஜேந்திரனின் 'துடிக்கும் விழிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா




மன்னார் எமில்நகரைச் சேர்ந்த வை. கஜேந்திரனின் துடிக்கும் விழிகள் என்ற பெயரிலான கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மாலை 2.00 மணியளவில் மன்னார் நகரமண்டபத்தில் நடைபெற்றது.

இவ் பிழாவில் பிரமத அதிதியாகக் கலந்துகொண்ட மன்னார் மாவ ட மேலதிக அரசாங்க அதிபர் அ. ஸ்ரான்லி டிமெல் நூலிடனை வெளியிட, மூத்த கலைஞரான கலாபூஷணம் செ. செபமாலை (குழந்தை) அவர்கள் பெற்றுக்கொண்டார். மன்னார் மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். ஷியான், அருட்பணி. தமிழ் நேசன், புனித செபஸ்தியார் பேராலய உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. ஜேசுராஜ் சில்வா, வைத்திய கலாநிதிகளான மு. கதிர்காமநாதன், எஸ். லோகநாதன், க. அரவிந்தன், முன்னாள் மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி திரு. யூட் பிகிராடோ, அதிபர் திரு. ஸ்ரான்லி டி மெல், சூரியன் எவ். எம். வானொலி அறிவிப்பாளர் திரு. டிலான் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### புகைப்பிடித்தல், மதுப் பாவனையால் வருடாந்தம் 2,80,000 பேர் சாவு



புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனையால் இலங்கையில் வருடமொன்றுக்கு சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 'போதையற்ற சமூகம் 2014' என்ற தேசிய வேலைத்திட்டத்தைச் சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின்கீழ் புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனை தொடர்பாக கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்கள் அண்மையில் அறிவூட்டப்பட்டனர். பாடசாலைப் பிள்ளைகள் புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனைப் பழக்கங்களுக்கு உள்ளாவதைத் தவிர்க்கும்வகையில் சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றன.

### டெங்கு நோயாளர் இதுவரை 13,556

2014ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலத்தில் நாடு முழுவதிலும் 13,556 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானவர்கள் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அந்தப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டின் 22ஆவது வாரத்திலேயே அதிகளவானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5,184 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் இதுவரையான காலத்தில் 819 டெங்கு நோய் தொற்றுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் கொழும்பு மாவட்டத்தில் 452 டெங்கு தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 92 டெங்கு தொற்றுநோயாளர்களும், ஏனைய பகுதிகளில் 360 டெங்கு தொற்றுநோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் அதி கூடுதலான டெங்கு பாதிப்பு பதிவாகியுள்ளது. 1,675 டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## மன்னார்ச் செய்திகள் சில வரிகளில் ....

### மன்னாரில் பேருந்து நிழற்குடைகள்

மன்னார் நகர்ப் புறத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு விசேட நடிவடிக்கை எடுத்துள்ளது.

### சட்டவிரோத மண் அகழ்வு

மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சூராய் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது. தென்பகுதியை சேர்ந்த நபரொருவர் அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் குறித்த கிராம மக்களை அச்சுறுத்தி மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார் என்று அந்தக் கிராம மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளாரிடம் முறையிட்டுள்ளனர்.

### மன்னாரில் மீண்டும் மீனவர்களுக்கு பாஸ்

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் மீனவர்களுக்கு கடற்தொழிலில் ஈடுபடுவதற்கான 'பாஸ்' நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் மீண்டும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

### மன்னாரில் 700 ஏக்கர் காணி கடற்படையிடம்

மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம் மற்றும் மறிச்சுக்கட்டி பிரதேசங்களில் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் புதிதாக அமைக்கப்பட்ட கடற்படை முகாம் காரணமாக சுமார் 700 ஏக்கர் பரப்புடைய தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக தொழிற்துறை மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதின் தெரிவித்தார்.

### மறிச்சுக்கட்டி மக்கள் அவலத்தை பார்வையிட்டது பிரஜைகள் குழு

மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறிச்சுக்கட்டிக் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்துகொள்ளும் முகமாக மன்னார் பிரஜைகள் குழுவினர் கடந்த 15.04.2014 அன்று அந்தப்பகுதிக்குச்சென்று கிராம மக்களுடனும், மதகுருமார்களுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

### 85 மாணவர்களுக்கு 'மஹாபோல'

மன்னார் மாவட்டத்தில் இருந்து பல்வேறு துறைகளில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 85 மாணவர்களுக்கு 'மஹாபொல' புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 10.04.2014 வியாழக்கிழமை மாலை 2.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெயிக்கா மண்டபத்தில் நடைபெற்றது.

### மதுபோதையில் வாகனம் செலுத்திய 1637 சாரதிகள் 10 நாட்களில் கைது

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நான்கரை மாத (4 1/2) காலப்பகுதியில் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய 14,153 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் புதுவருட காலப்பகுதியான ஏப்ரல் 10ஆம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 1637 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

### கழிப்பறையைப் பயன்படுத்தாதோர் உலகில் 100 கோடி பேர்

உலகில் 100 கோடிப் பேர் இப்போதும் பொது இடங்களில் இயற்கை அழைப்பை நிறைவேற்றுவதாகவும் இதனால் மரணத்தை ஏற்படுத்தும் நோய்கள் பரவுவதற்கு வழிவகுக்கும் என்று அவர்களுக்கு கூறவேண்டிய தேவை இருப்பதாவும் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## முருங்கனில் மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட 50வது பொது அமர்வு



இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்டத்தின் 50வது பொது அமர்வு கடந்த யூன் மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில் முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்றது. இந்தப் பொது அமர்வின் மையப்பொருளாக "இறைவனுக்கு நாம் அளிக்கும் கொடை (காணிக்கை)" என்பது அமைந்திருந்தது. இந்தப் பொது அமர்வையொட்டி 13ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு. கலாநிதி எ. டபிள்யு. ஜெபநேசன், மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் தலைவர் அருட்திரு. எஸ். டி. தயாசீலன், மன்னார் மறைமாவட்ட சட்ட முதன்மைக்குரு அருட்திரு. கலாநிதி எஸ். கே. தேவராஜா, மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், பல்சமய உரையாடல் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான இணைப்பாளருமான அருட்திரு. தமிழ் நேசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. முருங்கன் சேகர முகாமைக்குரு அருள்திரு. ரவி முருகுப்பிள்ளை இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். வட கிழக்கில் பணியாற்றும் மெதடிஸ்த திருச்சபையின் போதகர்கள் பலர் இந்த அமர்வில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மாவட்டத்தில் மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் மகத்தானவை!

### மெதடிஸ்த திருச்சபையின் 200ஆவது ஆண்டு நிகழ்வில் குருமுதல்வர் விக்ரர் அடிகளார்



மன்னார் மாவட்டத்தில் மெதடிஸ்த திருச்சபையின் சமய, சமூகப் பணிகள் மகத்தானவை. இந்த மண்ணில் மக்களின் சமய, ஆன்மீக வாழ்வை எழுச்சியுறச்செய்ய மெதடிஸ்த திருச்சபை மேற்கொண்ட, மேற்கொண்டுவருகின்ற பணிகளை யாவரும் அறிவர். ஆன்மீகப் பணிகளோடு பல சமூகப் பணிகளையும் அவர்கள் காலத்திற்கேற்ப மேற்கொண்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்றி வருகின்றனர். ஆகவே இந்தவேளையில் மன்னார் மக்கள் சார்பாகவும் சிறப்பாக மன்னார் கத்தோலிக்க சமூகம் சார்பாகவும் எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும், வாழ்த்துக்களையும் மெதடிஸ்த திருச்சபையினருக்கு தெரிவித்துக்கொள்கிறோம் என மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்தார்.

இலங்கையில் மெதடிஸ்த திருச்சபை அறிமுகப்படுத்தப்பட்ட 200வது ஆண்டு விழாவை மெதடிஸ்த திருச்சபையின் மன்னார் - முருங்கன் சேகரங்கள் இணைந்து மன்னார் மெதடிஸ்த ஆலயத்தில் கடந்த யூன் மாதம் 8ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொண்டாடின. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே விக்ரர் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

## கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவினரின் சர்வதேச மகளிர்தின நிகழ்வும், மகிழ்ச்சிச் சுற்றுலாவும்

மன்னார் மாவட்ட கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவானது மன்னார் மறைமாவட்ட குடும்பநலப்பணி ஆணைக்குழுவின் ஒரு அங்கமாக கத்தோலிக்கப் பெண்களின் பங்கேற்பையும், தலைமைத்துவத்தையும் மேம்படுத்த உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு ஆகும். இப்பணிக்குழு பதினொரு கிராமங்களில் இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளாரின் தலைமையின்கீழ் இயங்கிவருகின்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த 08.03.2014 அன்று அனைத்துப் பெண்கள் பணிக்குழு உறுப்பினர்களும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர்.

காலை 9.30 மணிக்கு இயக்குனர் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தலைவி திருமதி. மகாலட்சுமியினால் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இக்கருத்தமர்வில் பெண்களுக்கான வன்முறை, பெண் அடிமை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றில் இருந்து பெண்கள் எவ்வாறு தங்களைக் காத்துக்கொள்வது போன்ற வழிமுறைகள் கூறப்பட்டன. அதன்பின்னர் மதிய உணவு வழங்கப்பட்டு பின்னர் பெண்கள் பணிக்குழுவினரின் கலைநிகழ்வுகளுடன் பிற்பகல் 2.00 மணிக்கு இந்நிகழ்வானது இனிதே நிறைவுற்றது.

அடுத்து பெண்கள் பணிக்குழுவினரால் வைகாசி 3ம், 4ம் திகதிகளில் இயக்குனர் தலைமையில் திருகோணமலை நோக்கிய சுற்றுலா இடம்பெற்றது. இது சுற்றுலா இடங்களையும், புனித திருத்தலங்களையும் பார்வையிடுவதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்திருந்தது. இதன் பயனாக வீட்டினுள்ளே முடங்கிக்கிடக்கும் பெண்கள் சுதந்திரமாக வெளியே வந்து தெரியாத இடங்களைப் பார்வையிடக்கூடியதாக இருந்தது. ஒருவர் ஒருவரிடையே அன்புறவையும், தோழமையையும் வளர்க்க முடிந்தது. இச்சுற்றுலாவில் 2 அருட்சகோதரிகள் உட்பட 50 பெண்களும் 10 சிறுவர்களும் கலந்துகொண்டனர்.

- செயலாளர்: கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு.

## ஆட்காட்டிவெளியில் தேவ அழைத்தல் தினம்

கடந்த மே மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆட்காட்டிவெளிப் பங்கில் தேவ அழைத்தல் தினம் கொண்டாடப்பட்டது. அன்று காலை 7.15 மணியளவில் அருட்பணி. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் தலைமையில் திருப்பலி இடம்பெற்றது. இத்திருப்பலியை மறையாசிரியர்கள் மற்றும் பங்கிலுள்ள சிறார்கள் சிறப்பித்தனர். பங்கின் சிறார்கள் அனைவரும் வெள்ளைநிறச் சீருடை அணிந்து பவனியில் பங்குபற்றினர்.

அத்துடன் அன்றைய நாளை சித்திரை, வைகாசி மாதங்களில் பிறந்தநாள் மற்றும் திருமண நாட்களைக் கொண்டாடியவர்கள் நன்றிப்பலியாகவும் சிறப்பித்தனர். மறையுரையின்போது சிறார்களால் தேவ அழைத்தலில் குடும்பத்தின் பங்களிப்பு பற்றிய குறு நாடகம் அரங்கேற்றப்பட்டது. அந்நாடகமானது பங்கு மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. மாதத்தின் இறுதி ஞாயிற்றுகிழமைகளில் பங்கில் எல்லா மக்களும் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பார்கள். அன்றைய தினம் திருப்பலி முடிந்தவுடன் மறையாசிரியர்களினால் உணவுப்பண்டங்கள் விற்பனை செய்யப்படும்.

தகவல்: க. பிரசாந்தி, ஆட்காட்டிவெளி.

## சவேரியார்புரத்தில் திருவிழா

சிலாவத்துறையில் உள்ள சவேரியார் புரம் கிராமத்தில் உள்ள புனித சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த 19.05.2014 அன்று இடம்பெற்றது. 10.06.2014 அன்று பங்குத்தந்தை அருட்பணி. தவராஜ் அடிகளாரின் தலைமையில் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. றொனிஸ் வாஸ் அடிகளாருடன் இணைந்து மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் வழிபாடு ஆரம்பமானது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் வழிபாடுகள் நடைபெற்றன. ஒன்பது நாள் வழிபாடுகளும் இவ்வாண்டிற்கான மறைமாவட்டக் கருப்பொருளான மனித மாண்பும் குடும்ப வாழ்வும் என்ற தலைப்பிலேயே இடம்பெற்றது. ஒவ்வொரு நாள் வழிபாட்டையும் ஒவ்வொரு அருட்தந்தையர்கள் நெறிப்படுத்தினார்கள். இவ்வழிபாடுகளை ஒவ்வொரு அன்பியங்கள் சிறப்பித்தன.

இறுதியாக கடந்த 19.06.2014 அன்று காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி மடுப்பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இறுதியாக புனிதரின் ஆசீரோடு திருவிழா சிறப்பாக நிறைவுபெற்றது.

தகவல்: திருமதி. ஜெனிஸ்ரன் துரம். கொன்செப்ரா

## பள்ளிமுனை முதியோர் சங்கத்தினரின் மகிழ்வுச் சுற்றுலா







பள்ளிமுனைப் பங்கில் இயங்கிவரும் முதியோர் சங்கதைச் சேர்ந்த 48 பேர் கடந்த மே மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் கொழும்புக்கான மகிழ்வுச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். தலவில் புனித அன்னம்மா ஆலயம், தேவத்தை இலங்கை மாதா ஆலயம், கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயம், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், புதுச்செட்டித்தெரு வியாகுல அன்னை ஆலயம், சீதுவ கல்வாரிப் பாடுகள் தளம், விமான நிலையம் போன்ற இடங்களை இவர்கள் பார்வையிட்டனர். மன்னார் மறைமாவட்டத்தில் முதியோர் சங்கங்களுக்கு ஆன்மீக இயக்குனராக அண்மையில் நியமிக்கப்பட்ட அருட்திரு. ஒல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் தலைமையில் இச்சுற்றுலா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தட்சனா மருதமடுப்பங்கு முள்ளிக்குளம் 'அமல அருவி' சீகோ சமூக மேம்பாட்டு மையம் திறப்புவிழா





மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை இணைக்கும் எல்லைப்பகுதியில் தட்சனா மருதமடுப் பங்கு அமைந்துள்ளது. இப்பங்கில் தட்சனா மருதமடு, தேவாபுரம் எனும் கீரிசுட்டான், முள்ளிக்குளம் போன்ற இடங்களில் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டு மறைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பங்கு பணிவீச்சுக் கொண்ட முள்ளிக்குளம்வாழ் பொதுநிலைப்பணியாளர் சிலரது அயராத முயற்சியாலும், நற்செய்தி அறிவிப்புப் பணியாலும் உருவான மக்களாக திருநிலைப்படுத்தியவர்கள் தேவாபுரம் கிராம நிறுவுனரான அருட்திரு ஜே. பி. தேவராஜா அடிகளாரும், அருட்பணி. சூசைப்பிள்ளை அடிகளாருமாவர்.

இவ்விடம் பங்குத்தளமாக்கப்பட்டு இப்பகுதி அமலமரித்தியாகிகள் சபை அருட்பணியாளர்களின் கண்காணிப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பங்கிலே ஓடி ஓடி உழைத்து ஒளியாம் கிறிஸ்துவின் அரசைக் கட்டியெழுப்பிய பெருமை முதற் பங்குத்தந்தையான அருட்பணி. பேதுறு அருள்நாதன் அமதி அடிகளாரையே சாரும். இவரைத் தொடர்ந்து பல இளம் குருக்கள் துடிப்போடு பணிகளை முன்னெடுத்து வந்துள்ளனர். தற்பொழுது அருட்பணி. பீற்றர் இராசநாயகம் அமதி அடிகளார் பங்குப் பணிகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றார். இவரது பணியின் சிறப்புச் செயற்பாடாக 'அமல அருவி' மேம்பாட்டு மையம் விளங்குகின்றது.

நீர்வளம், நிலவளம், வனவளம் ஒருங்கே அமையப்பெற்ற முள்ளிக்குளம் கிராமத்தில் இம்மையம் அமைந்துள்ளது. இதற்கு 'அமல அருவி' சீகோ சமூக மேம்பாட்டு மையம் எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. இம்மையத்தின் திறப்பு விழா கடந்த 19.05.2014 அன்று சிறப்பான வகையில் கொண்டாடப்பட்டது. இம்மையத்திற்கு முதன்மை விருந்தினர்களாக அழைக்கப்பட்ட திரு. திருமதி. கோர், சீனி இருவரும் பண்பாட்டு முறைப்படி இம்மையத்தைத் திறந்து வைத்தனர்.

அமதி சபையின் மாகாணத்தலைவர் அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகளார், மடுப்பிரதேச செயலாளர் திரு. சத்திய சோதி, முன்னைநாள் பங்குத்தந்தை அருட்பணி. பே. அருள்நாதன் (அமதி), பல இளங்குருக்கள், அமதிகளின் நிதி முகாமையாளர் அருட்பணி. பீஸ்மன் (அமதி), அன்புக்கன்னியர் சபையின் அருட்சகோதரி மேரி ஜெபக்கொடி, அரச, அரசசார்பற்ற நிறுவனப்பணியாளர் சிலரும், அயற்கிராமங்களின் மக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும், சகோதர சமயப் பெரியார்களும், கிராமப் பொதுமக்களும், கட்டடக்கலைஞர்களும் அடங்கலாக முன்னூறு பேர் வரை கலந்து சிறப்பித்தனர்.

இக்கட்டடம் அமைவதற்கு உந்துவிசையாக இருந்தவர் அமதி சபை மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார். இதை முன்னின்று நடாத்தியவர் பங்குத்தந்தை பீற்றர் இராசநாயகம் அமதி அடிகளார். இக்கட்டடத்தின் உயிரூட்டமான நிதிக்கொடையான 5 மில்லியன் ரூபாவை அள்ளி வழங்கியவர்கள் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த கோர் சீனி மண இணையர் ஆவர். இம்மையத்துக்கான நிலம் 5.5 ஏக்கரை காணிக்கையாக்கியவர்கள் கிராமத்தின் ஒரு மூத்த குடியேற்றவாசிக் குடும்பத்தினர். இம்மையத்தை அமைப்பதற்கான முன்செயற்பாடுகளை கிராமத்தலைவர்கள், கிராம மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து வழங்கினர்.

இம்மையம் பின்தங்கிய நிலையிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்துக்கும் தட்சனாமருதமடுப் பங்கு முழுமைக்கும், ஆன்ம சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுப் பணியகமாகத் திகழ்ந்து முழு மனித விடுதலையை வாரிவழங்கும் என்பது எம் நம்பிக்கை. இம்மையத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து வளர்ச்சிச் செயற்பாட்டிற்கும் மறைமாவட்ட ஆயர், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொறுப்புடையோர் யாவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம். இத்தனையும் செய்த் இறைவனுக்கு என்றென்றும் புகழும் மகிமையும் உண்டாவதாக.

தகவல் : திரு. ய. மரியவளன், பங்குச்செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48வது உலக தொடர்பாடல் தினத்திற்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

# எதிர்கொள்ளுதலின் உண்மையான பண்பாட்டுப் பணியில் தொடர்பாடல்

## Communication at The Service of an Authentic Culture of Encounter

தமிழாக்கம்:- திரு. யோசேப் ஆரோக்கியம் குரூஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர், மடு கல்வி வலயம் - மடு

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே,

சுருங்கிச் செல்லும் உலகொன்றில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். இதனால் நாம் அனைவரும் அண்டைவீட்டுக்காரராகும் இலகுநிலை காணப்படுகிறது. பயணித்தல், தொடர்பாடல் தொழில் நுட்பங்களிலான அபிவிருத்தியானது எம்மை மிக நெருக்கமாக்குவதுடன் எம்மை மிகவும் பிணைத்தும் நிற்கின்றது. பூகோளமயமாக்கல் ஒருவரையொருவர் அதிகளவு சார்ந்து நிற்கச்செய்கின்றது. ஆனாலும் சிலவேளைகளில் மிக ஆழமான பிளவுகள் எமது மானிட குடும்பத்தினுள்ளே தொடர்ந்தும் காணப்படுகின்றன. ஏழைகளின் முழுத்தரித்திர நிலைமைக்கும், செல்வந்தர்களின் செல்வ வளமைக்குமிடையே நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கின்ற பாரிய இடைவெளி ஒன்றினையும் உலகளாவிய ரீதியில் நாம் காண்கின்றோம். மாடமாளிகைகளில் ஜொலிக்கும் வர்ணஜாலங்களுக்கும், தெருவிலே வாழ்நாளைக் கழிக்கின்ற மக்களுக்குமிடையிலான தெளிவாகத் தெரியும் வேற்றுமையைக் கண்டுகொள்வதற்கு நகரத்தின் தெருக்களிலே அடிக்கடி வெறுமனே நடக்கவேண்டும். எங்களை எப்பொழுதுமே குழப்பமடையச் செய்யாத இத்தகைய விடயங்களுக்கு நாம் நன்கு பழக்கப்பட்டுவிட்டோம். பொருளாதார, அரசியல், கருத்தியல் ஏன் மதரீதியான உட்கருத்துக்கள் போன்றவற்றின் ஒன்றுசேர்த்தலால் எத்தகு முரண்பாடுகளும் பிறப்பெடுக்கவில்லையென சொல்லிக்கொண்டாலும், நாம் வாழும் உலகம் ஒதுக்கிவைத்தல், ஓரங்கட்டுதல், வறுமை போன்ற பல்வேறு அம்சங்களினால் துன்பப்படுகின்றது.

இத்தகைய உலகில் மானிட குடும்பப்பிணைப்பு எனும் உணர்வினை உருவாக்குவதுடன், மறுபுறத்தில் ஒற்றுமை, அனைவருக்குமான மாண்புமிகு வாழ்வு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான கடின முயற்சியை உள்வாங்கியதாக ஒருவரை ஒருவர் நெருக்கமாக உணர்வதற்கு ஊடகம் எமக்கு உதவமுடியும். சிறந்த தொடர்பாடலானது நாம் நெருக்கமாக வளர்வதற்கும், ஒருவரையொருவர் நன்கு அறிவதற்கும் ஈற்றில் ஒற்றுமையில் வளர்வதற்கும் உதவுகிறது. ஒருவரையொருவர் உற்றுக்கேட்பதற்கும், ஒருவரிலிருந்து ஒருவர் கற்றுக்கொள்வதற்கும் நாம் தயாராக இருந்தால் மட்டுமே எம்மைப் பிரித்துநிற்கும் சுவர்களைத் தகர்க்கமுடியும். பரஸ்பர மரியாதை, புரிந்துணர்வு போன்றவற்றில் நாம் வளர்வதற்கு உதவக்கூடிய கலந்துரையாடல் வடிவங்களினூடே எமது வேற்றுமைகளை நாம் களைந்துகொள்ள வேண்டும்.

எதிர்கொள்ளுப் பண்பாடானது நாம் கொடுப்பதற்கு மட்டுமன்றி பெற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதை வேண்டி நிற்கின்றது. மானிடத்தொடர்பாடல் வலையமைப்புக்கள் முன்னோடியில்லாத முன்னேற்றங்களினை அடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் ஊடகமானது இவ்விடயத்தில் எமக்கு பெருமளவு உதவமுடியும். குறிப்பாக இணையத்தளமானது எதிர்கொள்ளல், ஒற்றுமை போன்றவற்றிற்கான பாரியளவு சாத்தியப்பாடுகளினை வழங்குகின்றது. உண்மையில் இது கடவுளின் சிறந்த கொடையாகும். பிரச்சினைகள் இல்லையென்று சொல்வதற்கில்லை. தகவல்கள் பரிமாறப்படுகின்ற வேகமானது எமது ஆழ்ந்த சிந்தனை, எமது தீர்ப்பு போன்றவற்றிற்கான எமது கொள்திறனை மீறிச்செல்வதுடன் இது அதிகளவு சம நிலையையும், சரியான சுயவெளிப்பாட்டு வடிவங்களினையும் உருவாக்குவதில்லை. விளம்பரப்படுத்தப்படும் பல்வேறு வகையான அபிப்பிராயங்கள் உதவியாகத் தோன்றினாலும், மக்களின் பொருளாதார, அரசியல் அபிலாசைகள் அல்லது சொந்த விருப்புக்கள், கருத்துக்கள் போன்றவற்றை மட்டுமே உறுதிப்படுத்துகின்ற தகவல் மூலகங்களின் பின்னால் மக்கள் தம்மைத்தாமே முடக்கிக்கொள்வதற்கும் காரணமாகின்றன. தொடர்பாடல்களின் உலகமானது ஒன்றில் எமது அறிவை விருத்தியாக்கவோ அன்றேல் எமது தகுதிகளினைத் தொலைப்பதற்கோ துணைபுரியலாம். எமக்கு மிக நெருக்கமான அண்டைவீட்டுக்காரரிடம் இருந்து எம்மைத் தனிமைப்படுத்துகின்ற தாக்கத்தினை டிஜிரல் இணைப்பிற்கான ஆசை எம்மில் ஏற்படுத்தலாம். என்ன காரணத்திற்காவது சமூக ஊடகத்தினை அடைய முடியாதவர்கள் பின்தள்ளப்படுகின்ற அபாயத்திற்குள்ளாகும் உண்மையினை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

இத்தகு பின்னடைவுகள் உண்மையாக விளங்கும் அதேவேளை சமூக ஊடகத்தினை அவை புறந்தள்ளுமாறு நியாயப்படுத்தவில்லை. மாறாக அவை தொடர்பாடலானது தொழில்நுட்பசாதனை என்பதற்கு மேலாக மனிதசாதனை என்பதனை எமக்கு ஞாபகமூட்டுகின்றன. ஆயின் மானிடத்துவம், பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றில் நாம் வளர்வதற்கு எமக்குத்துணைபுரிகின்ற எது டிஜிரல் சூழலில் காணப்படுகின்றது? ஆழ்ந்து ஆராயும் திறன், அமைதி போன்ற குறிப்பிட்ட புலன் உணர்வுகளினை நாம் மீளப்பெறவேண்டிய தேவையை உதாரணமாகக் குறிப்பிடலாம். இதற்கு காலமும், அமைதியாக இருந்து உற்றுக்கேட்பதற்கான திறனும் தேவைப்படுகின்றன. எம்மிலிருந்து வித்தியாசமானவர்களினை நாம் புரிந்துகொள்ள வேண்டுமாயின் நாம் அமைதிகாக்க வேண்டும். தாம் வெறுமனே சகித்துக்கொள்ளப்படுவதற்கு மாறாக தாம் பூரணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றோம் என்பதை அறிகின்றபோதே மக்கள் தம்மைத்தாமே பூரணமாக வெளிப்படுத்துவர். நாம் உண்மையில் ஏனையவர்களினைக் கருத்தோடு கவனிப்போமாகில் உலகினை வெவ்வேறு கண்களால் காண நாம் கற்றுக்கொள்வோம்.




அத்துடன் பல்வேறு கலாசாரங்களிலும், பாரம்பரியங்களிலும் செறிந்துள்ள மானிட அனுபவத்தின் செழுமையினையும் பாராட்டத் தெரிந்துகொள்வோம். அத்துடன் கிறிஸ்தவத்தில் உள்வாங்கப்பட்டுள்ள மானிட மனிதன் பற்றிய நோக்கு குடும்பத்தினதும், திருமணத்தினதும் தன்மை, அரசியல் செல்வாக்கெல்லைக்கும் சமயத்திற்குமிடையிலான சரியான வேறுபாடு, ஒற்றுமை மற்றும் குறைவைச் சரிக்கட்டும் தன்மையின் தத்துவங்கள் மற்றும் இதுபோன்ற அனைத்து மிகமுக்கிய விழுமியங்களினை மிகவும் பூரணமாகத் தெரிந்துகொள்ளவும் நாம் கற்றுக்கொள்வோம்.

அவ்வாறாயின் தொடர்பாடலானது எவ்வாறு எதிர்கொள்ளுதலின் பண்பாட்டுச் சேவையாக விளங்கமுடியும்? இறைவனின் சீடர்களாக விவிலியத்தின் வெளிச்சத்தில் ஏனையவர்களினை எதிர்கொள்வதுபற்றி இது எமக்கு எதனைத் தெரிவித்துநிற்கின்றது? எமது சொந்த சூழ்நிலைக் கட்டுப்பாடுகள், பாவப்பழுக்கள் மத்தியில் எவ்வாறு நாம் ஒருவரையொருவர் உண்மையாக நெருங்கிச் செல்லமுடியும்?

ஒருதடவை, லூக்கா நற்செய்தியில் (10:25) எனது அயலான் யார்? என இயேசுவைக் கேட்ட செய்தியாளரது வினாவிலேயே இத்தகு வினாக்கள் யாவும் உள்ளடங்கியுள்ளன. அண்டைவீட்டுக்காரன் என்ற பதத்திலேயே தொடர்பாடலை நாம் உற்றுநோக்க இவ்வினா எமக்கு உதவமுடியும். இவ்வினாவை நாம் பின்வருமாறு மாற்றி எழுதமுடியும். டிஜிரல் தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பட்ட புதிய சூழலிலும் தொடர்பாடல் ஊடகங்களின் எமது பயன்பாட்டிலும் நாம் எவ்வாறு அண்டைவீட்டுக்காரனாக முடியும்? தொடர்பாடல்பற்றிய ஓர் உவமையாகிய நல்ல சமாரித்தன் உவமையிலேயே நான் விடையைக் காணவிழைகின்றேன். சிறந்த முறையில் தொடர்பாடலைப் பேணுபவர்கள் அண்டைவீட்டுக்காரராகின்றனர். வீதியில் குற்றுயிராகக் கிடந்த மனிதனைக் கண்ணுற்ற நல்ல சமாரித்தன் அவனை நெருங்கிமட்டும் செல்லவில்லை. அவற்றுக்கான பொறுப்பினையும் ஏற்றுக்கொள்கின்றான். இயேசு எமது புரிந்துணர்வை திசைமாற்றுகின்றார். ஏனையவர்களை என்னைப்போன்ற ஒருவனாக பார்ப்பது மட்டுமன்றி ஏனையவர்களைப்போன்று என்னையே மாற்றிக்கொள்ளும் திறனைக் குறிப்பிடுகின்றார். நாம் அனைவரும் மானிடப்பிறவிகள், கடவுளின் பிள்ளைகள் என்பதை உண்மையாக உணர்ந்துகொள்வதே தொடர்பாடலாகும். இத்தகு தொடர்பாடல் சக்தியினை அண்டைவீட்டுக்காரனாகவே நான் காணவிழைகின்றேன். நுகர்வினை ஊக்கமூட்டுவதை அல்லது ஏனையவர்களைத் திறமையாகக் கையாள்வதனை பிரதான நோக்கமாகத் தொடர்பாடல் கொண்டுள்ள அதேவேளை கள்வரால் தாக்கப்பட்டு தெருவில் அநாதரவாக விடப்பட்ட நல்ல சமாரித்தன் உவமையில் வரும் மனிதன் அடைந்த துயரத்தைப்போல நாம் வன்முறையான அடிதடி வடிவத்திலேயே தொடர்புகொள்கின்றோம். குருவானவரும், லேவியனும் காயப்பட்டவனை அண்டைவீட்டுக்காரனாக நினைக்கவில்லை. மாறாக ஓர் அந்நியனாக எட்டவைத்தே நோக்கினர். அக்கால மத ரீதியான தூய்மை எனும் சட்டம் அவ்வாறு அவர்கள் நடந்துகொள்ளக் காலாயிற்று. இவ்வாறே தற்காலத்திலும் குறிப்பிட்ட ஊடகம் நாம் எமது உண்மையான அண்டைவீட்டுக்காரனைக் காணத்தவறுகின்ற வகையில் எமது பதிலிறுக்கும் நிலையை அவ்வாறே கட்டுப்படுத்துகின்ற அபாயம் கொண்டுள்ளது. எளிமையாக இணைக்கப்பட்டுள்ள டிஜிரல் நெடுஞ்சாலைகளினை அறியாதிருப்பது போதுமானதன்று. இணைப்புகள் உண்மையாக எதிர்கொள்ளத் தக்கவையாக வளர்ச்சியடைய வேண்டும். நாம் எமக்குள் எம்மை முடக்கி மற்றவனின் நின்றும் நீங்கலாக வாழமுடியாது. நாம் அன்பு செய்யவும், அன்புசெய்யப்படவும் வேண்டிய தேவை உடையவர்கள். மென்மை உள்ளம் எமக்கு தேவையாகவுள்ளது. ஊடக உபாயங்கள் தொடர்பாடலில் அழகு, நன்மைத்தனங்கள், உண்மை என்பவற்றை உறுதிப்படுத்தவில்லை. ஊடக உலகமானது மானிட இனத்தை கருத்தில்கொள்ளவும், மென்மையுள்ளத்தைக் காண்பிக்கவும் அழைக்கப்படுகிறது. டிஜிற்றல் உலகமானது மானிட இனத்தினால் செழுமைப்படுத்தப்படுகின்ற ஓர் சுற்றாடலாக முடியும். வயர்களினால் அன்றி மானிடர்களினாலான ஓர் வலையமைப்பாக முடியும். ஊடக நடுநிலை தவறாமை என்பது மிகையற்ற தோற்றப்பாடு. தமது தொடர்பாடலில் தம்மிலிருந்து வெளிச்செல்பவர்கள் மட்டுமே ஏனையவர்களுக்கான உண்மையான குறிப்புரையாக மாறமுடியும். தொடர்பாடுனரின் நம்பத்தகுந்த தன்மையின் அடிப்படையாக விளங்குவது தனிப்பட்ட ஈடுபாடாகும். கிறிஸ்தவ சாட்சியம் இணையத்தளத்திற்கு நன்றிகூறி மானிட இருப்பின் புறஎல்லையை நெருங்க முடியும்.

தன்னையே நினைந்து துன்பப்படும் திருச்சபைக்கும், தெருவிற்குச் செல்லும் [illegible] திருச்சபைக்குமிடையில் ஓர் தெரிவினை மேற்கொள்வதாயின் அடிக்கடி நான் மேற்கொண்ட அவதானிப்பின் அடிப்படையில் இரண்டாவது திருச்சபையையே நான் தெரிவுசெய்வேன். அந்த வீதிகள்தான் மக்கள் வாழும் உலகம். அங்கேதான் அவர்களை ஆழமான மனப்பதிவேற்படுத்தும் வகையிலும், உணர்ச்சிபூர்வமாகவும் நெருங்கமுடியும். டிஜிரல் நெடுஞ்சாலை அவைகளில் ஒன்று. அடிக்கடி மனம் புண்படுகின்ற, நம்பிக்கையையும், இரட்சணியத்தையும் வேண்டிநிற்கின்ற ஆண்கள், பெண்களினால் பெருக்கமுடையதாயிருக்கின்ற ஓர் தெரு. இணையத்தளத்தினூடே கிறிஸ்தவ செய்தி உலகின் ஓரந்தம் முதல் மறு அந்தம் வரை செல்ல முடியும் (Acts.1:8). எமது திருச்சபையின் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதானது டிஜிரல் சூழலில் அவற்றைத்திறந்து வைத்திருப்பதனைக் கருதுகிறது. வாழ்வின் எத்தகைய சூழ்நிலையில் காணப்படும் மக்களும் உள்நுழைய முடியும். இதனூடே விவிலியம் ஒவ்வொருவரையும் சென்றடைய வெளிச்செல்ல முடியும். திருச்சபையே அனைவரினதும் இல்லம் என்பதை காண்பிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இத்தகு திருச்சபையின் எண்ணத்தினை வெளிப்படுத்தக்கூடிய தகுதியுள்ளவர்களாக நாம் விளங்குகின்றோமா? முழுத்திருச்சபையினதும் மறைபரப்புப்பணியினை வெளிக்காட்டும் வழிமுறையே தொடர்பாடலாகும். இயேசுக்கிறிஸ்துவை எதிர்கொள்ளும் அழகினை. நம்பிக்கையின் அழகினைக் கண்டுகொள்வதற்கான அழைப்பினை அனுபவிப்பதற்கான ஒரு வழிமுறையே இன்றைய சமூக வலையமைப்புக்களாகும். தொடர்பாடல் பரப்பிற்குள்ளும் வெதுவெதுப்பும், உயிர்த்துடிப்புமுள்ள இதயங்களினைக் கொண்டுவரத்தக்க திறமையுள்ள திருச்சபை நமக்குத் தேவையாகவுள்ளது.

பயன்தரத்தக்க கிறிஸ்தவ சாட்சியம் என்பது வெறுமனே மதரீதியான செய்திகளினால் மக்களை தாக்குவதனைக் குறிக்கவில்லை. மாறாக ஏனையவர்களால் நாம் அணுகப்படத்தக்கவர்களாக விளங்கவேண்டிய எமது சுயவிருப்பத்தினையும், மானிட இருப்பின் அர்த்தம், உண்மை போன்றவற்றிற்கான ஏனையவர்களின் தேடலின் முன்னேற்றத்தின்போது எழுகின்ற அவர்களது சந்தேகங்கள், வினாக்கள் போன்றவற்றினை பொறுமையுடனும், மரியாதையுடனும் செவிமெடுக்கக்கூடியவர்களாக விளங்குவதனையுமே குறித்து நிற்கிறது (XVI பெனடிக்ற் 2013ம் ஆண்டிற்கான 47வது உலக தொடர்பாடல் தின செய்தி).

எம்மாவுசுக்கான பயணப்பாதையில் நடந்த சீடர்களது கதையினை நாம் மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருதல் வேண்டும். இன்றைய ஆண்கள், பெண்களது எதிர்பார்ப்புக்கள், சந்தேகங்கள், நம்பிக்கைகளினை விளங்கிக்கொள்ளவும் தானே மனித அவதாரம் எடுத்து எம்மைப் பாவத்தினின்றும், மரணத்தின் பிடியினின்றும் விடுவிப்பதற்காக மரித்து உயிர்த்த இறைமகன் இயேசுவின் நற்செய்தியை அவர்களுக்கு வழங்கவும் கூடியவர்களாக அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடக்கூடியவர்களாக நாம் விளங்கவேண்டும். எம்மைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பதை ஆழ்ந்த கருத்தோடு கவனிப்பதும், ஆன்மீக ரீதியான எச்சரிக்கையோடும் வாழவேண்டியதுமான சவால் நிறைந்த மக்களாக நாம் விளங்குகின்றோம். கலந்துரையாடல் என்பது ஏனையவர்கள் போதியளவு பயன்தரத்தக்க எதையோ சொல்லவுள்ளார்கள் என்பதனை நம்புவதாகும். அத்தோடு அவன் அல்லது அவளது நோக்கும்விதம், தெளிவான வரைவு என்பவற்றிற்கு வரவேற்பளிப்பதுமாகும். கலந்துரையாடலில் ஈடுபடுவது என்பது எமது சொந்த எண்ணங்கள், பாரம்பரியங்கள் என்பவற்றின் உரிமையைத் துறத்தல் என பொருள்படாது. மாறாக அவை தனித்து பெறுமதிமிக்கவை அல்லது முழுமையானவை என உரிமை கோருதலை குறித்து நிற்கிறது.

காயப்பட்ட மனிதனின் இரணங்களுக்கு எண்ணையையும், திராட்சை இரசத்தையும் ஊற்றுவதில் மன ஈடுபாடு கொண்டிருந்த நல்ல சமாரித்தனின் உவமை எமது உயர்ந்த எண்ணப்பாங்காக, எமது அகத்தூண்டுதலாக அமைதல் வேண்டும். எமது தொடர்பாடலானது வலிநீக்கும் மருந்தாகவும், இதயங்களை மகிழ்வூட்டும் சிறந்த திராட்சை இரசமாகவும் அமையட்டும். நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் ஒளியானது வெறுமனே கலைந்துசெல்லும் அழகுசாதனப் பொருட்களின் விளைவுகளாகவன்றி, காயப்பட்டு வீதியோரங்களில் கைவிடப்பட்டுள்ள அன்பும், இரக்கமும்மிகு அண்டைவீட்டுக்காரன்மீது பாய்ச்சப்படும் ஒளியாக அமையட்டும்.

நாம் டிஜிரல் உலகின் நம்பிக்கையும், மனத்துணிச்சலும் கொண்ட பிரஜைகளாவோம். இன்று மக்களுடன் கலந்துரையாடவும், கிறிஸ்துவை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவும் நோக்கிலும் தொடர்பாடல் உலகம்பற்றி திருச்சபை அக்கறைகொள்ள வேண்டும்; அதனை உள்வாங்க வேண்டும். ஏனையவர்களது பக்கம்சார்ந்ததாகவும், பாதை நெடுகிலும் ஒவ்வொருவருடனும் கூடநடக்கின்ற தகுதியுள்ள திருச்சபையாக இருக்கவேண்டிய தேவையுள்ளது. தொடர்பாடல்களின் ஊடகத்திலும் தகவல் தொழில்நுட்பங்களிலும் ஏற்படுகின்ற புரட்சியானது மாபெரும் உள்ளக்கிளர்ச்சியூட்டுகின்ற சவாலினை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கின்றது. இத்தகு சவாலுக்கு புத்தம்புது சக்தியுடனும், கடவுளின் அழகினை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான மனக்காட்சியுடனும் முகம் கொடுப்போமாக.

**வத்திக்கானில் இருந்து 2014 ஜனவரி 24 புனித பிரான்சிஸ் டி சால்ஸ் நினைவாக - திருத்தந்தை பிரான்சிஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

### கொழும்பு உயர் மறைமாவட்டத்தில்
# இணையத்தள தொலைக்காட்சி ஆரம்பம்



கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க தொலைக்காட்சிக் கலையகத்தை (Catholic T.V. Chanel Studio) கடந்த யூன் மாதம் 7ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் திறந்துவைத்தார்.

'வேர்பும்' (Verbum) என்ற பெயரைத் தாங்கிய இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை இணையத்தளத்தில் ஒளிபரப்பாகும். இதன் முதல் ஒளிபரப்பு இவ்வாண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை இலங்கையில் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான வாசல்களைத் திறந்துவிடும் என்றும், நாட்டின் பல்வேறு விடயங்கள் தொடர்பாக திருச்சபையின் கருத்தை உடனுக்குடன் வெளிப்படுத்துவதற்கு இது பெரும் உதவியாக இருக்கும் எனவும் இங்கு உரையாற்றிய கர்தினால் குறிப்பிட்டார்.

### துறவற வாழ்வில் பொன்விழாக் காணும்
# கிறிஸ்ரி அடிகளார்



யாழ்ப்பாணம், சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தைச் சேர்ந்த அருட்பணி கிறிஸ்ரி கனகநாயகம் மனுவேற்பிள்ளை (அ.ம.தி) அடிகளார் தனது குருத்துவ வாழ்வின் முதல் அர்ப்பணத்தை 1964 வைகாசி மாதம் 31ம் திகதி ஏற்றுக்கொண்டு இறைவனின் குருவாக 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணம் மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு எல். ஆர் அன்ரனி ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அமலமரித்தியாகிகளின் மறையுரைஞனாக தனது பணியை ஆரம்பித்து யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, கொழும்பு போன்ற மறைமாவட்டங்களில் பல பங்குத்தளங்களில் இறைபணியாற்றி நிறைந்த அனுபவங்களோடு விளங்கும் கிறிஸ்ரி அடிகளார் அனைத்து மக்களுடனும் அன்பாகவும், பண்பாகவும், பழகும் பண்பாளர்; எல்லா மக்களின் பாராட்டுக்குரியவர்.

மறை அறிவின் உயர் கல்வியைக் கற்கவும், கற்பிக்கவும் அதன்வழி பணியாற்றவும் உலகின் பல நாடுகளுக்குச் சென்று மிகுந்த ஆற்றலும் அனுபவமும் பெற்று நாடு திரும்பினார். அமலமரித்தியாகிகளின் பல மனிதநேய அமைப்புக்களின் ஆன்மீக ஆலோசகராகச் செயற்பட்டார். குறிப்பாகப் போர்க்காலச் சூழ்நிலையில் பல மாவட்டங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு - விசேடமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு பல்துறைப் பணியாற்றினார். தமிழ்க் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகக் குருவாகத் தலைமைப்பீடத்தினால் நியமனம் பெற்று தொடர்ந்தும் பல பங்குகளில் பாங்குடன் பணியாற்றி வருகின்றார்.

அமலமரித் தியாகிகளின் சபையைச் சார்ந்த பொன்விழாக் காணும் ஒன்பது குருக்களுடைய நன்றித்திருப்பலி கடந்த 14.06.2014 கொழும்பு புனித டி மசனட் இல்ல சிற்றாலயத்தில் அமதிகளின் அதிசிரேஷ்டர் மேன்மைமிகு லூயி லோகன் (ரோம்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்தந்தைக்கு அவருடைய சொந்தப் பங்கு மக்கள் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றார்கள்.

**தகவல்: புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கு மக்கள், நண்பர்கள், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**

## கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு 16 புதிய குருக்கள்




கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கென கடந்த மே மாதம் 10ஆம் திகதி அன்று 16 புதிய குருக்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர். கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை இவர்களைத் திருப்பொழிவு செய்தார்.

## கர்தினால் அமைச்சர் விமல் சந்திப்பு

கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை கட்டட நிர்மாணம், பொறியியல் மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச கடந்த 19.05.2014 அன்று பொறளையிலுள்ள பேராயரின் இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்போது தேசிய சுதந்திர முன்னணியின் இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 12 தீர்மானங்கள் அடங்கிய ஆவணத்தை அமைச்சர் பேராயரிடம் கையளித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறித்த தீர்மானங்களை நிறைவேற்ற அரசாங்கம் மறுக்கும்பட்சத்தில் எமது கட்சி சுயாதீனமாகச் செயற்படும் அதாவது அரசாங்கத்திலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும் என்றார்.

இதேவேளை, உங்களது செயற்பாடுகள் வெறும் நாடகமென்று எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பியபோது எதிர்க்கட்சி கூற்றுப்படி இது நாடகமா அல்லது உண்மையா என்பது விரைவில் தெரியவரும் என்று அமைச்சர் கூறினார்.

## பாப்பரசர் வருகைக்கு பின்னர்தான் தேர்தல்

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தலானது இரண்டு மாதம் பிற்போடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தரவுள்ளமையே இதற்கான காரணமாகும் என்று கூறப்படுகிறது.

பாப்பரசரின் இலங்கைப் பயணத்தின்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது இக்கட்டானது என்று அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள்.

### யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில்
# முத்தமிழ் விழாவும் நூல் வெளியீடும்



யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றம் நடாத்திய "முத்தமிழ் விழாவும் நூல் வெளியீடும்" அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் அ. அருண் ஜெனுசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாஷையூர் நாட்டுக்கூத்துக் கலைஞரான அண்ணாவியார் கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்கள் எழுதிய "பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி" எனும் நாட்டுக்கூத்து நூல் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது. நூலினை புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி. ஜே. பி. அன்ரனிதாஸ் அடிகளார் பெற்றுக்கொண்டார். நூலுக்கான அறிமுக உரையை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை ஆசிரியர் தி. யோ. யோண்சன் ராஜ்குமார் வழங்கினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அண்ணாவியார் கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்களின் கலைப்பணியைப் பாராட்டி புனித பத்திரிசியார் கல்லூரி சமுகத்தினர் அவருக்கு 'கலைத்தகழி' நாமம் சூட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். பாடசாலைமட்டத் தமிழ்த் தினப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை பிரதம விருந்தினரின் துணைவியார் திருமதி. செபஸ்ரியம்மா பாலதாஸ் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். மாணவர்களின் நாட்டார் இசை, நடன நிகழ்வுகளுடன் "பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி" நாட்டுக்கூத்து அரங்காற்றுகை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. நன்றியுரையினை முத்தமிழ் மன்ற உப செயலாளர் செல்வன் அ. றொகான் டியோனி நிகழ்த்தினார்.

### யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில்
# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப்பேருரை

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இயங்கிவருகிற தமிழ்த்தூது தனிநாயகம் தமிழ் மன்றமானது கடந்த 04.06.2014 அன்று தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப்பேருரையை ஒழுங்குசெய்திருந்தது.

மன்றக்காப்பாளர் அருட்பணி. இ. பெ. தயாபரன் அடிகளாரின் வழிகாட்டலின்கீழ் இம்முறை 11வது நினைவுப்பேருரை ஒழுங்குசெய்யப்பட்டது.

*'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் கல்வி மற்றும் ஆராட்சிப் பங்களிப்பு'* என்ற தலைப்பிலே பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் பேருரை வழங்கினார். தனிநாயகம் அடிகளாரின் வாழ்வியல் பக்கங்களுக்குள்ளே நுழைந்து மிகச்சிறந்த, மிக நேர்த்தியான ஓர் ஆய்வுத்தரமுடைய உரையை இவர் வழங்கியிருந்தார். குருக்கள், அருட்சகோதரர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் இதில் பங்குபற்றிப் பயன்பெற்றனர். பேருரைக்குப் பின்னரான கலந்துரையாடலில் இன்றைய கல்விப்போக்கு தொடர்பான பல நடைமுறைச் சவால்கள் தொடர்பான பல வினாக்கள் எழுப்பப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

அருட்பணி. கலாநிதி அ. பி. ஜெயசேகரம் அடிகளார் அவையைத் தலைமை ஏற்று மிகச் சிறப்பாக நிகழ்வை முழு நிறைவுபெறச்செய்தார்.

ஓர் இனம் தொடர்ந்து தன் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள மொழி உயிர்ப்புடன் இருப்பது அவசியத்தேவை எனவும் இத்தகைய முயற்சிகள் அந்தத் தேவையை வலியுறுத்துவதில் சிறந்த பங்காற்றுவதாகவும் தமிழ் ஆர்வலர்கள் பலர் குறிப்பிட்டனர்.



**தனிநாயகம் அடிகளார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வழிபாட்டில் பங்கேற்கும்போது கவனிக்க வேண்டியவை

### தமிழாக்கம் : அருட்சகோதரி இலேன் (அ.கா)

## தேசிய வழிபாட்டு ஆணைக்குழுவின் வெளியீடு

நாம் ஆலயத்திற்கு செபிப்பதற்கோ, ஆராதனைக்கோ, திருவருட்சாதனக் கொண்டாட்டங்களுக்கோ செல்லும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

1. உங்கள் கையடக்கத் தொலைபேசியை நிறுத்துங்கள்.
2. தொடர்பாடல் இலத்திரனிகளை வீட்டில் அல்லது வாகனத்தில் வையுங்கள்.
3. எதற்காக ஆலயத்திற்கு வந்தீர்களோ அந்நோக்கம் நிறைவேற உங்களைப் பக்குவப்படுத்தி இறைவனை மையப்படுத்தி தயாராகுங்கள்.
4. எவ்வகையிலும் பிறருக்கு இடறலாக இராதீர்கள்.
5. ஆலயத்திற்கு வரும்போது மரியாதையான ஆடைகளை அணியுங்கள்.
6. ஆலயத்தைக் களியாட்ட இடமாகவோ, பொழுதுபோக்கு இடமாகவோ நினைத்து, தரக்குறைவான - அரைகுறையான ஆடைகளை அணியாதீர்கள்.
7. பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் எப்படியான ஆடைகளை அணியவேண்டுமென்பதைச் சொல்லிக்கொடுங்கள். அவர்களுக்கு முன்மாதிரியாக இருங்கள்.
8. பிள்ளைகள் ஆலயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கற்பிப்பது பெற்றோரினதும் பெரியோரினதும் கடமையாகும்.
9. ஆலயம் இறைவனின் இல்லம் என்பதையும், திருப்பீடத்தில் இறைவன் உயிருள்ள பிரசன்னமாக இருக்கிறார் என்பதையும் கற்பியுங்கள்.
10. செபம், திருப்பலி, கட்டுப்பாடு, மனதை ஒருநிலைப்படுத்தல், ஒழுங்கு, மரியாதை இவைபற்றி உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள்.
11. உண்பதற்கும், குடிப்பதற்கும் உரிய இடமாக ஆலயத்தை மாற்றாதீர்கள்.
12. உங்கள் பிள்ளைகளின் விளையாட்டுத்தனம், பராக்கு ஆகியவை திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்க, இறைவார்த்தை மற்றும் மறையுரைகளை விருப்பமுடன் கேட்க வருபவர்களுக்கு இடையூறாக இருக்கும்.
13. ஆலயத்தில் நேரத்துடன் சமூகமளித்து அந்நாளுக்குரிய இறைவார்த்தையைத் தியானித்து எம்மைத் தயார்செய்வது பெரிதும் நன்மை பயக்கும்.



14. திருப்பலி ஆரம்பமாவதற்கு நேரம் இருக்கும்போது அந்நேரத்தைப் பிறருடன் அரட்டை அடிப்பதற்கோ, கலந்துரையாடுவதற்கோ செலவிட வேண்டாம். அந்நேரத்தில் இறைவனைச் சந்தித்துப் பயன்பெற வந்தவர்களுக்கு இது தடையாக இருக்கும்.
15. திருப்பலியில் பார்வையாளராக அல்ல, பங்கேற்பாளராக மாறுங்கள். திருப்பலியில் கூறப்படும் செபங்களுக்கு இறைமக்களுடன் இணைந்து பதிலளியுங்கள்.
16. திருப்பலியில் எமது அதியுயர் ஆராதனையை இறைவனுக்குக் கொடுக்கிறோம். இவ்வேளையில் ஆண்டவர் இயேசு தாமே உயிருள்ள பிரசன்னமாக இறைவார்த்தைப் பகிர்விலும், திருவுடல் ஊட்டத்திலும் எம்மோடு ஒன்றிக்கின்றார்.

எனவே எம் துர்மாதிரிகையாக நடை, உடை பாவனையினால், செயல்களினால் இறைவழிபாடுகளைக் களங்கப்படுத்தாமல் கலாச்சாரத்துடன் இணைந்து மரியாதையான பக்குவமான உடைகளை அணிவோம். இவ்வாறு நம்மையும் பிறரையும் இறைவன்பால் ஈர்த்திடுவோம்.

# செபமாலைக் கன்னியர்கள்

### செபமாலைக் கன்னியர் மடம், பட்டித்தோட்டம், மன்னார்.



எமது இலங்கை மண்ணிலே எம் நாட்டுக்குருவான இறையடியார் தோமஸ் அடிகளாரால் செபமாலைக் கன்னியர் சபை நிறுவப்பட்டது. செபத்தால் உலகை மாற்ற முடியும் என்ற சபை ஸ்தாபகர் தோமஸ் அடிகளாரின் வார்த்தைகளை நம்பிக்கையாகவும், இயேசுவின் அதிஉன்னத பலியாகிய திருப்பலியைத் தங்கள் வாழ்வுக்கு மையமாகவும் கொண்டு, மரியன்னையின் பரிந்துரைக்கேற்ப செபமாலைக் கன்னியர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். திவ்விய நற்கருணையே இவர்கள் வாழ்வின் அர்த்தமாகவும் இதயத்துடிப்பாகவும் இருந்துவருகின்றது.

மறைந்த தியானயோக வாழ்வில் சகோதரிகள் நசரேத்தின் திரு இல்லத்திலே இயேசுநாதரும் தேவதாயும் சூசைநாதரும் வாழ்ந்த எளிமையான வாழ்வைப் பின்பற்றி வாழ்கின்றனர். இறைவனைத் தேடுதல், அவர்கள் வாழ்வில் தனி உரிமையாக இருப்பதோடு செபமாலைக் கன்னியரின் விசேட பக்தி செபமாலைப் பக்தியாகும். பாவிகளை மனந்திருப்பவும், ஆன்மாக்களை உத்தமனத்திற்கு இட்டுச்செல்லவும், இறைவனுக்குப் பிரியமான வல்லமையுள்ள ஆயுதத்தைப் பயன்படுத்தும்படி கூறிய தேவ அன்னையின் வேண்டுகோளை நிறைவேற்றி, உலகம் நவநாகரீகச் சேற்றுக்குள் சிக்கிவிடாமல் தங்கள் செப தப பரிகார வாழ்வால் திருச்சபையுடன் இணைந்து முழு உலக மக்களின் வாழ்விற்காக, மீட்பிற்காகச் செபிக்கும் செபமாலைக் கன்னியர்கள் செப மனிதன் தோமஸ் அடிகளாரின் அருமைச் செல்வங்கள் ஆவர்.

செபமாலைக் கன்னியர் சபை உங்கள் துறவறக் குடும்பம் ஆகும். உங்களிலிருந்து உரிமையுடன் உருவான 'உறவு' இது. செப உதவி கேட்பவர்களின் கண்ணீர் துடைக்கும் கலைதெரிந்த செபக்குழுவினர் இவர்கள். மறை மாவட்டங்களை மறைந்த செப வாழ்வால் மலரவைக்கும் தியான யோகிகள் இவர்கள். ஆசியாவில் மலர்ந்து இன்று திருச்சபையில் வளர்ந்து பூத்துக்குலுங்கும் செபமாலைக் கன்னியர்களுடன் நாமும் இணைந்து இறைவனிடம் மன்றாடுவோம். இந்த அழகிய உலகை அழிவுகளிலிருந்து காப்பாற்றும்படி வேண்டுவோம். எல்லோரும் ஒற்றுமையாகவும், அன்போடும், நிலையான இறை அமைதியுடனும் வாழ ஒன்றிணைவோம். எம் நாட்டில் இறை அழைத்தல் பெருக மன்றாடுவோம். இளநங்கையர்கள் இறைவனுக்குத் தம் கன்னிமையை அளிக்க முன்வருவார்களாக! இறைவன் இன்று உன்னையும் என்னையும் அழைக்கின்றார். சகோதரிகளே நீங்கள் தயாரா?

### மடுமாதா சிறிய குருமட யூபிலியை முன்னிட்டு இடம்பெறவுள்ள

# இறை அழைத்தல் கண்காட்சி

## யூபிலி செயற்குழுவின் அறிக்கை

மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாக இருந்து வருகின்ற மடு மாதா சிறிய குருமடம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்கின்ற இவ் யூபிலி ஆண்டிலே, குருக்கள் துறவிகள் அருட்சகோதரர்கள் ஆகிய நாங்களும் அதன் மகிழ்ச்சியில் இரண்டற கலந்துகொள்கின்றோம்; இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

இந்த யூபிலிக் கொண்டாட்டத்தை மறைமாவட்டம் முழுவதும் இணைந்து கொண்டாடும் முகமாக 'இறை அழைத்தல்' என்ற தலைப்பிலே வருகின்ற ஆவணி மாதம் 30, 31ஆம் திகதிகளில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். இதனடிப்படையில் ஒவ்வொரு பங்குகளுக்கும் தலைப்புகள் வழங்கப்பட்டு, பங்குத்தந்தையர்கள், பங்குமக்கள், மறையாசிரியர்கள், கத்தோலிக்க இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் ஒன்றாக இணைந்து இக்கண்காட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி சிறப்பிக்குமாறு அன்போடு அழைத்து நிற்கிறோம்.

இக்கண்காட்சியானது மன்னார் மடு மாதா சிறிய குருமடத்திலே நடைபெறும். உங்கள் பங்குகளுக்கென்று பிரதியேகமாக ஒதுக்கப்படுகின்ற இடங்களிலே உங்களுக்கென்று தரப்படுகின்ற தலைப்பிற்கமைய காட்சிகளையும் பதாதைகளையும் ஒழுக்கமைக்குமாறு கேட்டுநிற்கின்றோம். இதற்கான ஆயத்தங்களை நேரகாலத்தோடு செய்துமுடிக்கின்றபொழுது இந்தக் காட்சியானது பொருள் உள்ளதாகவும், பயன் உள்ளதாகவும் அமையும் என நாங்கள் நம்புகின்றோம்.

இதற்கான செலவீனங்களை பங்குகளே பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம். காட்சிகளை, பதாதைகளை அமைப்பது மாத்திரம் அல்ல அதற்கான தகுந்த விளக்கங்களையும் பார்வையிட வருபவர்களுக்கு வழங்குவதற்கு சிறந்த வளவாளர்களையும் தயார்படுத்துமாறு பங்குத்தந்தையர்களாகிய உங்களை வினயமாகக் கேட்டுநிற்கின்றோம்.

தேவ அழைத்தல்கள் குறைந்துவருகின்ற இக்காலத்திலே எம் மறைமாவட்டத்திலே தேவ அழைத்தலைப் பெருக்கவும், எம் மாணவ மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஓர் விழிப்பூட்டலை வழங்கவும், சிறிய குருமட யூபிலியைச் சிறப்பிக்கும் முகமாகவும் அமைகின்ற இந்த அழைத்தல் கண்காட்சியினை பார்வையிடுவதற்கு உங்கள் பங்கு மக்கள், கத்தோலிக்க இளைஞர்கள், மாணவர்கள் அனைவரையும் அழைத்துவருமாறு அன்போடு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இது தொடர்பாக மேலதிக ஆலோசனைகளையும் உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். தூர இடங்களிலே இருக்கின்ற பங்குகள் இந்தக் கண்காட்சியினை நடாத்துவதற்கு உங்களுக்கு தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

*மேலதிக விபரங்களுக்கு அருட்தந்தை சேவியர் குருஸ் அடிகளாரைத் தொடர்புகொள்ளவும்.*

### இறை அழைத்தல் கண்காட்சி

# தலைப்புக்களும் பொறுப்பளிக்கப்பட்ட பங்குகளும்

**தலைப்புக்கள்** — **நெறிப்படுத்துகின்ற பங்குகள்**

**பிதாபிதாக்கள்**

1.ஆபிரகாம் - பேசாலை
மோசே, யோசுவா - வவுனியா
சூசை - தாழ்வுபாடு

**இறைவாக்கினர்கள்**

4.எசாயா, எரேமியா, எசேக்கியல், ஆமோஸ், யோனா - மன்னார் பேராலயம்

**புதிய ஏற்பாடு**

5. நாசரேத்தூர் திருக்குடும்பத்தில் சூசை, மரியாள், அழைப்பு, வாழ்வு - முத்தரிப்புதுறை
6. தூய பேதுருவும் ஏனைய திருத்தூதர்களின் அழைப்பும் சாட்சியமும் - வங்காலை
7. ஆதிக்கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வும் அழைப்பும் (ஸ்தேவான், லோரன்சியார்) - தலைமன்னார்
8. பவுல் அடிகளாரும் அவரது உடன் உழைப்பாளர்களதும் அழைப்பும் வாழ்வும் - நானாட்டான்
9. திருமுழுக்கு அருளப்பர் - பம்பைமடு

**புனிதர்கள்**

10. புனித பிரான்சிஸ் சவேரியார் - ஆட்காட்டிவெளி
11. அருளாளர் யோசப்வாஸ் - தோட்டவெளி
12. புனித அகுஸ்தினார், யோன் மரிய வியான்னி - அளவக்கை
13. புனித மரிய கொரற்றி - பண்டிவிரிச்சான்
14. புனித பிரான்சிஸ் அசிசி - தரணிக்குளம்
15. புனித மிக்சி மில்லியன் கோல்பே - வஞ்சியன்குளம்
16. இந்தியாவின் மறைசாட்சிகள் (அருளானந்தர், புனித தோமா, புனித அல்போன்சா) - விடத்தல்தீவு.
17. புனித நிலைக்கு உயர்த்தப்பட்ட திருத்தந்தையர்கள் (23ஆம் அருளப்பர், 2ஆம் அருள் சின்னப்பர்) - அடம்பன்
18. புனித அந்தோனியார் - செட்டிகுளம்
19. புனித செபஸ்தியார் - சிலாவத்துறை முள்ளிக்குளம்
20. திருவருட்சாதனம் வழியாக அழைப்பும் அதன் பல்வேறு பரிமாணமும் - தேவன்பிட்டி (திருமுழுக்கு, உறுதிப்பூசுதல்)
21. திருவருட்சாதனம் வழியாக அழைப்பும் அதன் பல்வேறு பரிமாணமும் - அந்தோனியார்புரம் (குருத்துவம், திருமணம்)
22. புனித அலோசியஸ் கொன்சாகா (ஞானப்பிரகாசியார் ) - கீளியன்குடியிருப்பு
23. புனித டோமினிக் சாவியோ - கனகராயன்குளம்
24. புனித வின்செண் டீ பவுல் - தட்சனாமருதமடு

**பொதுத்தலைப்புக்கள்**

25. மன்னார் மறைசாட்சிகள் (தோட்டவெளி) - பள்ளிமுனை
26. மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிந்த, புரிகின்ற குருமணிகள் (மண்ணின் மைந்தர்கள்) - குஞ்சுக்குளம்
27. மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிந்த வெளிநாட்டு மிஷனறிமார் - எழுத்தூர்
28. மன்னார் மறைமாவட்டத்தின் உதயமும் வளர்ச்சியும் - காத்தான்குளம்
29. குடும்பங்கள் அழைத்தலின் விளைநிலங்கள் - வேப்பங்குளம்
30. இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களில் அமைந்துள்ள சிறிய பெரிய குருமடங்கள் - இலுப்பைக்குளம்
31. 2ம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் வந்த திருச்சபையின் மறுமலர்ச்சி - சிறுக்கண்டல்
32. மன்னார் மறைமாவட்டத்தின் திருத்தலங்கள் - ஓமந்தை
33. The place of contemplative vocation in the life of the church - கோமரசன்குளம்
34. puppet show- வெள்ளைக்கார குருக்களின் வருகை, மறையுரை, அழைத்தல் மறைமாவட்டத்தின் வளர்ச்சி - முருங்கன்
35. பொதுநிலையினருக்கான அழைப்பும் வாழ்வும் (2வத்திக்கான் சங்க ஒளியில்) - உயிலங்குளம்
36. எங்கள் சிறிய குருமட வரலாறு, சிறு போட்டிகள் - சிறிய குருமட மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# முதல் நூற்றாண்டுகளைவிட இக்காலத்தில் அதிக மறைசாட்சிகள்

## திருத்தந்தை பிரான்சிஸ் கவலை

சமய சுதந்திரம் குறித்த அனைத்துலக கருத்தரங்கில் கலந்துகொள்ளும் ஏறக்குறைய 200 பிரதிநிதிகளை கடந்த யூன் மாதம் 20ஆம் திகதி வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமய அடக்குமுறைகளால் இன்று உலகெங்கும் கிறிஸ்தவர்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் தனக்கு மிகுந்த வேதனை தருகின்றது என்று தெரிவித்தார்.

இன்றைய உலகில், சமய சுதந்திரத்துக்கு ஆதரவாக எண்ணற்ற கருத்துக்கள் வெளிவந்தாலும், சமய அடக்குமுறையும், அலைக்கழிப்பும் ஏன் கொலைகளும்கூட இன்று உலகெங்கும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று கூறிய திருத்தந்தை, இந்தச் செயல்கள் குறிப்பாக, கிறிஸ்தவர்களுக்கெதிரான சமய அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன என்று கவலை தெரிவித்தார்.

"அனைத்துலகச் சட்டத்தின் அடிப்படையில் சமய சுதந்திரம் - உலகில் இடம்பெறும் மோதல்களின் தாக்கங்கள்" என்ற தலைப்பில், உரோம் நகரில் 20.06.2014 அன்று தொடங்கியுள்ள



இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளிடம் திருத்தந்தை இவ்வாறு கூறினார். இக்காலத்தில் இடம்பெறும் கிறிஸ்தவர்களுக்கெதிரான அடக்குமுறைகள், திருஅவையின் முதல் நூற்றாண்டுகளில் நடந்ததைவிட அதிகக் கொடூரமாய் இருக்கின்றன என்றும், அந்தச் சகாப்தத்தைவிட இக்காலத்தில் அதிகமான கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாக உயிரிழக்கின்றனர் என்றும் திருத்தந்தை கூறினார்.

# கைதிகள் சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதை எளிதாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## சிறைக்கூடத்தில் திருத்தந்தை உரை



சிறைக் கைதிகளும் அதிகாரிகளும் திருத்தந்தையை வரவேற்கின்றனர்



உலங்குவானூர்தியில் செல்லும் திருத்தந்தையை மக்கள் வழியனுப்பி வைக்கின்றனர்.

சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதை நோக்கிய பயணம், நம்மை அன்புசெய்கின்ற, நம்மை அறிந்திருக்கின்ற, நம் பாவங்களை மன்னிக்கின்ற இறைவனோடு சந்திப்பு ஏற்படுத்துவதில் அமைந்துள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த யூன் மாதம் 21ஆம் திகதி அன்று இத்தாலியக் கைதிகளிடம் கூறினார்.

உரோம் உள்ளூர் நேரம் காலை 7.30 மணிக்கு தென் இத்தாலியின் கலாபிரியா மாநிலத்துக்கு ஒருநாள் திருப்பயணத்தை மேற்கொண்ட திருத்தந்தை, முதலில் அம்மாநிலத்தின் மாவட்டச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகள் மற்றும் அலுவலர்களுக்கு ஆற்றிய உரையில் இவ்வாறு கூறினார். சிறையில் இருப்பவர்களின் அடிப்படை மனித மாண்புப்படி அவர்கள் நடத்தப்பட வேண்டும் என்ற நியதி இருக்கும்வேளை, கைதிகள் சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதை எளிதாக்கும் முயற்சிகளும் சிறை அதிகாரிகளால் எடுக்கப்பட வேண்டுமென திருத்தந்தை வலியுறுத்தினார்.

இந்த நோக்கம் நிறைவேற்றப்படாதபோது சிறைத்தண்டனை வெறும் தண்டனையாகவும், பழிக்குப்பழி வாங்குவதாக மட்டுமே இருக்கும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# திருத்தந்தையின் திருமொழிகள்



## பிறரைத் தீர்ப்பிடுகிறவர்கள் வெளிவேடக்காரர்கள்

தனது சகோதரரைக் குற்றவாளி எனத் தீர்ப்பிடுகிறவர் தானும் அதேபோல் தீர்ப்பிடப்படுவார். இறைவன் ஒருவரே ஒரே நீதிபதி. மாறாக, தீர்ப்பிடப்படுகிறவர் அவரின் முதல் நீதிபதியான இயேசு மற்றும் தூய ஆவியின் பாதுகாப்பில் எப்போதும் தன்னை வைக்கலாம் எனக் கடந்த யூன் மாதம் 23ஆம் திகதி காலைத் திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் அன்றைய வாசகத்தை மையமாக வைத்து ஆற்றிய மறையுரையில், பிறர் உடமைளை அநியாயமாய்ப் பறித்துக்கொள்பவர் இறுதியில் அவரே இழப்பவராக இருப்பார். ஏனெனில் அவரிடம் குறைபடும் கருணைக்கு அவரே பலியாகிவிடுவார் என்றும் திருத்தந்தை எச்சரித்தார்.

தீர்ப்பிடுகிறவர் தவறு செய்கிறார்; குழம்பிப்போய் இருக்கிறார்; மற்றும் தோல்வியடைந்தவராக மாறுகிறார். ஏனெனில் ஒரே நீதிபதியாக இருக்கும் இறைவனின் இடத்தை அவர் எடுத்துக்கொள்கிறார் என்றும் திருத்தந்தை கூறினார்.

இயேசு வானகத்தந்தையின் முன்னால் ஒருபோதும் நம்மைக் குறைகூற மாட்டார். மாறாக நமக்காகப் பரிந்துபேசுவார். அவரே நமக்காக முதலில் பரிந்துபேசுபவர் என்று உரைத்த திருத்தந்தை, நாம் இயேசுவின் பாதையில் நடக்க விரும்பினால் ஒருபோதும் தீர்ப்பிடாதவர்களாய் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## இவ்வுலக மதிப்பு, அதிகாரம், பணம் உண்மையான மகிழ்வைத் தராது

இவ்வுலக மதிப்பு, அதிகாரம், பணம் ஆகியவற்றின் கவர்ச்சி இதயத்தைக் கடினப்படுத்தும்; மற்றும் அது உண்மையான மகிழ்வைக் கொண்டுவராது. மாறாக நம் அடுத்திருப்பவர்மீது நாம் காட்டும் அன்பும், இறைவழிபாடுமே நம் இதயங்களை மகிழ்ச்சிப்படுத்தும் உண்மையான சொத்துக்கள் எனக் கடந்த யூன் மாதம் 20ஆம் திகதி காலைத் திருப்பலியின்போது திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம் என இயேசு தம் சீடர்களுக்குக் கூறும் அறிவுரையை மையமாக வைத்து அன்று காலை சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை, இவ்வுலகச் செல்வங்களே முதலில் எப்போதும் ஆபத்தாய் இருக்கின்றது என்று கூறினார்.


நமக்கும் நம் குடும்பங்களுக்கும் அவசியமானவைகளை வழங்குவதற்கு பணம் தேவை என்றாலும், எப்போதும் செல்வத்தைச் சேகரிப்பதற்கான வழிகளைத் தேடுவோர் இறுதியில் தங்கள் ஆன்மாக்களை இழந்துவிடுவார்கள் என்பதையும் திருத்தந்தை நினைவுபடுத்தினார்.

இந்தச் செல்வங்களை நீங்கள் தேடினால் உங்கள் இதயம் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும், நம் இதயங்கள் இந்தச் செல்வங்களை நாடாமல் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்று இயேசு விரும்புகிறார். நாம் விண்ணகச் செல்வங்களைத் தேடினால் மட்டுமே நம் இதயங்கள் சுதந்திரமாக இருக்கும் என்றும் திருத்தந்தை கூறினார். அன்பு, பொறுமை, பிறர்பணி, இறைவனை வழிபடுதல் ஆகியவையே விண்ணகச் செல்வங்கள் என்றும் திருத்தந்தை தனது மறையுரையில் கூறினார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பெனடிக்ட்

மடாதிபர் (கி.பி. 480 - 547)




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

புனித கொலாஸ்திகாவின் சகோதரர்; மேற்கத்திய துறவற சபையின் தந்தை. திருமறை நூலுக்கு அடுத்து இவர் எழுதிய துறவற வாழ்வின் ஒழுங்குநூல் துறவிகளுக்கு மிகவும் உறுதுணையாய் இருந்தது.

12ஆம் பத்திநாதர் இவருக்கு 'ஐரோப்பாவின் தந்தை' என்ற பட்டம் சூட்டியுள்ளார்.

இப்புனிதர் உயர்ந்த குலத்தில் தோன்றியதனால், புகழ்பெற்ற உரோமை நகரில் கல்வி கற்றுக்கொள்ள இவர் தம் பெற்றோர் இவரை அனுப்பினர். இங்கு படிக்க வந்திருந்த இளைஞரிடையே நிலவிய தீமைகள் இவரை பதைபதைக்க வைத்தன. உடனே உரோமையைவிட்டு ஓடினார். மறைநூலில் சொல்லப்பட்டதுபோல பாவச் சூழ்நிலையைவிட்டு பாம்பைக் கண்டதுபோல ஓடிவிட்டார். இம்முயற்சி எப்போதும் எல்லோருக்கும் ஒரு பெரிய பாடம்.

இச்சூழலில் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணிக்கத் திட்டமிட்டார். ஒரு மலை உச்சிக்குத் தனியாகச் சென்றார். அங்கே எர்மானுஸ் என்ற தவமுனிவரைச் சந்தித்தார். இம்முனிவர் காட்டிய வழியில் 3 ஆண்டுகள் இவருக்குச் சற்று அப்பால் சென்று தாமும் முனிவராக வாழ்ந்து வந்தார். இவர் தவவாழ்க்கை மேற்கொண்டதை அறிந்த பலரும் அங்கு இவரைச் சூழ்ந்துகொண்டனர். இதன் விளைவாக தோன்றியதுதான் 'பெனடிக்ற்' துறவற சபை.

இவரின் சபைத் துறவிகளுக்கு கிறிஸ்துவுடன் மாறாத, எவராலும் பிரிக்க முடியாத, நட்புறவு கொண்டிருக்கக் கற்றுத்தந்துள்ளார். அதோடு அனைத்திலும் ஞானத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்பது மற்றொரு கட்டளை. கூட்டுவாழ்வு மூலம் பெறக்கூடிய ஞான நன்மைகளைத் துறவியர் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார். கி.பி. 1946இல் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் இவரை ஐரோப்பிய நாடுகளின் சிறப்புப் பாதுகாவலர் என அறிவித்தபோது, அவரது துறவற சபையில் 12,000 துறவிகள் இருந்தனர். அதுபோல் இரண்டு மடங்கு கன்னியர்களும் 13,000 சிஸ்டேர்ஷியன், ட்டாப்பிஸ்ற் துறவிகளும் இவர் தந்துள்ள ஒழுங்குகளைக் கடைப்பிடித்து அனுசரித்து வந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவர் காலத்தில் பொதுவாக மேலைநாடுகளில் மனித உழைப்பும் கைவேலையும் மனித மாண்பைக் குறைக்கின்றன என்றும், அவை அடிமைகளால் மட்டுமே செய்யப்பட வேண்டுமென்ற தவறான கருத்து நிலவியது. இதைக் கண்டிக்கும் வகையில் மோன்றே கசினோ என்ற இடத்தில் துறவு சபையை ஏற்படுத்தும்போதே "ORAET LABORA" என்ற சட்டத்தையும் இவர் ஏற்படுத்தினார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 33.

# கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதாரம் வேண்டும்

### 'காக்கைக்குக் கனவிலும்...'

மகனைப் பாடசாலை ஒன்றில் புதிதாகச் சேர்ப்பித்தார் தந்தை. பாடசாலையில் இருந்து திரும்பிய முதல் நாளே, "செக்ஸ்'(Sex) என்றால் என்ன அப்பா?" எனக் கேட்டான். தந்தை யோசித்தார், "பதினாறு வயதில கேட்கிற கேள்வியை ஆறு வயதில் கேட்கிறான். யாரும் இதனைப்பற்றிச் சொல்லி, இவனைக் கெடுக்கிறதுக்குமுன் நானே இதனைப்பற்றிச் சொல்லிவிடுவேன்!" என நினைத்தவர் ஆதிப்பெற்றோரான ஆதாம் ஏவாளோடு தொடங்கி, ஆண் பெண் உறவு, கணவன் மனைவி உறவு என விலாவாரியாக விளக்கித் தள்ளினார். கொஞ்ச நேரத்திற்குள் குழப்பமடைந்த சிறுவன் அழாக்குறையாக, "நீங்க சொன்ன இவ்வளத்தையும் எப்பிடியப்பா இவ்வளவு சின்ன இடத்தில் எழுதிறது?" எனக் கையிலிருந்த 'அப்பிளிகேசன் போம்' (Application Form) ஒன்றைக் காண்பித்தான். அதில் Name, Age இவற்றுக்குப் பின்னால் Sex எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### சமூகத்தை வேரறுக்கும் தீமைகள்

2013 கார்த்திகைத் திங்கள் நடத்தப்பட்ட வடமாகாண சபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாண முதல்வர் சி. வி. விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம் வரணியில் மாசித் திங்கள் 02ஆம் நாள் பொது நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டு உரையாற்றியபோது இரு சமூகத் தீமைகளைக் குறிப்பாகத் தொட்டுக் காட்டியிருக்கிறார். கணவனை இழந்த பெண்கள் விபச்சாரத்திற்கு தூண்டப்படுவது, பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பழக்கத்தை ஏற்படுத்துவது போன்றவைகளைச் சிலர் மறைமுகமாக ஊக்கப்படுத்தி வருவதாகச் சொல்லியிருக்கிறார். நமது மண்ணில் இதுவரை சந்தித்திராத மிகப்பெரும் சவால்களாக இவற்றை இன்று நோக்கவேண்டி இருக்கிறது. இத்தீமைகளை வெற்றிகொள்ள சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, இவற்றைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சமூகத்தை வேரறுக்கும் மிகப்பெரும் தீமைகளாக இவை மாறிவிடுவதை யாராலும், எதனாலும் தடுக்க முடியாது போய்விடும்.

### பெண்ணின் பெருமை

"சைவத்தில் சக்தியாக பார்வதி, பிரம்மனின் சக்தியாக சரஸ்வதி, வைணவத்தில் சக்தியாக லட்சுமி, கிறிஸ்தவத்தில் பெண்ணின் பெருமையாக - மகிமையான மரியாள். குரானில் "பெண்களுக்கு சமத்துவ உரிமை" எனப் பெண்ணின் சிறப்பை சமயங்களில் இருந்து எடுத்துக்காட்டுகிறார் ***'வெப்பமுடன்'*** என்ற நூலின் ஆசிரியர் இயேசுசபை அருள்பணியாளர் ஜெரி.

புரட்சிக்கவி பாரதி,

*"பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!*
*பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!*
*தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன*
*தாயின் பேரும் ஸதியென்ற நாமமும்"* என்றும்,
*"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்க்கும் ஈசன்*
*மண்ணுக்குள் சில மூடர் - நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி*
*காட்சி கெடுத்திடலாமோ*
*பெண்கள் அறிவை வளர்த்தால் - இல்லம்*
*பேதமை அற்றிடும் காணீர்"*

எனவும் பாடிப் பெண்மையைப் பெருமைப்படுத்தினார்.

தமிழ் மணம் கமழ,

*"மங்கையராய் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவம் செய்திடவேண்டும் அம்மா*
*பங்கயக் கைந்நலம் பார்தல்லவோ - இந்தப்*
*பாரினில் அறங்கள் வளருதம்மா"*

எனப் பெண்களாய்ப் பிறப்பதன் பெருமையை கவிமணி தேசிய விநாயகம்பிளளை பாடினார்.

### பெண் விளம்பரப் பொருளா?

பெண்மையை - பெண்களைத் தெய்வ நிலையில் வைத்துக் கொண்டாடிப் பெருமை கொண்ட சமுதாயம் இன்று எவ்வாறு பெண்மையை - பெண்களை நோக்குகிறது என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. பெண் இன்று வியாபார உலகத்தில் ஒரு விளம்பரப் பொருளாக – உடல் இன்பத்தை அனுபவிக்கும் உயிராகப் பார்க்கப்படுவது மிகவும் வேதனைக்குரியது, துரதிஸ்ரவசமானது. இந்நிலையினை,

"பெண் ஓர் ஊதுவத்தி!
அவளின் நேற்று – எரிந்துவிட்டது.
இன்று – எரிந்துகொண்டிருக்கிறது.
நாளை– கறுப்பாக இருக்கிறது"

என இக்காலக் கவிஞன் ஒருவன் எழுதுகிறான்.

"தங்கமே! என் தங்கமே என்று தாயும் தந்தையும் கொஞ்சியதால்தானோ அந்த உயிருள்ள தங்கங்கள் தங்க நகை கேட்டும் தண்டிக்கப்படுகிறார்கள்" என நியாயமான கேள்வி எழுப்புகிறார் கவிஞர் மு. மேத்தா.

"பெண் தன்னை விற்றுக்கொண்டால் விபச்சாரமாம்.
ஆண் தன்னை விற்றுக்கொண்டால் திருமணமாம்" என இன்றைய ஆணாதிக்கச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

### தாலாட்டின் பரிணாம வளர்ச்சி!

பெண்களின் வாழ்க்கைமுறையை இன்றைய உலகப் போக்கு மாற்றியிருக்கிறது. இயல்பான சூழ்நிலையில் இருந்து எத்தகைய நெருக்கீடுகளுக்கு அவர்கள் உள்ளாகி வாழுகிறார்கள் என்பதனைத் 'தாலாட்டுப் பாடல்' அடைந்த பரிணாம வளர்ச்சியின் ஊடாக மிகத்துல்லியமாகப் புரிந்துகொள்ளலாம்போல் தோன்றியது. எனவேதான், தாலாட்டுப் பாடல்களை வைத்துக்கொண்டே காலமாற்றத்தினைக் கணித்துக்கொள்ள ஒருவகைப் பரீட்சார்த்த முயற்சி செய்யப்படுகிறது.

1980களுக்குமுன் தாலாட்டு இவ்வாறாகப் பாடப்பட்டது:

"ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுதாய்?
அரிய கண்ணால் நீர்வழிய?
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்!
மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே?
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே?
ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே?
ஆண்பனையின் நுங்கே! அணில்கோதா மாம்பழமே!"
கூப்பிட்டு நான் கேட்பேன், குஞ்சரமே கண்வளராய்!"

எனத் தாயினால் குழந்தை நித்திரையாகும்போது, அழும்போது, குளிப்பாட்டும்போது எனப் பல சந்தர்ப்பங்களில் பாடப்பட்டது.

1990களில் நம் மண்ணில் பாடப்பட்ட தாலாட்டுப் பின்வருமாறு:

"கருவறையின் வேலிக்குள்ளிருந்து
கம்பிவேலிக்குள் கண்மலர்ந்த கண்மணியே!
மனையொன்று தானின்றி மாதா இவள் தவிக்கையிலே
மழை வெள்ளக் கூட்டமது மடைதிறந்து பாய்கையிலே
நலம்புரி நிலையமெனும் அனல்சூழ் அரங்கத்திலே
வந்து பிறந்தாயோ – வைரமணியே!
இரு கைகள் இல்லையடா என்னவனே உனைத்தூக்க
இடதுகை இழந்தேனடா எறிகணை எனைத்தாக்க
கருதந்த உனதப்பா காணாமல் போனதெங்கே?
ஒருதுணை தானின்றி உயிர்வாழும் தாய் இங்கே?
துக்கமும் கண்ணீரும் தவிர சொல்லிடச் சொந்தமில்லை
சுந்தரம் உனக்குப் பாலூட்ட என்னிடம் மார்பு இல்லை.
போர்க்காலம் தனிலே மார்பிழந்த மங்கையருள் மாதா இவள்.
புட்டிப்பால் ஊட்டுகிறேன் புதுமலரே சுவைத்திடடா.
புதுக்காலம் பூக்குமடா அதுவரை பொறுத்திரடா!"

எனப் புரட்சி என்பவர் போர்க்காலத் தாலாட்டாக அமைத்திருக்கிறார்.

2000ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து இற்றைவரை பாடப்பட்டுவரும் நவீன தாலாட்டுக்கு இப்போது வார்த்தை வடிவம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது. சுவைத்துத்தான் பாருங்களேன்!

கண்ணே! – என் காவாலிப் பயலே (மகளே)!
காதுகிளியக் கத்தாதேயடா(டி)!
நீ முளிக்கும் முன்பே உன்னம்மா
வெளிக்கிட்டு வேலைக்கு ஓடிட்டா!
என்னால் என்ன செய்ய முடியும்?
அம்மாவைக் கேட்டளாதே
அவ அஞ்சு (ஐந்து) மணிக்குத்தான்!
அப்பாவைக் கேட்டளாதே!
அவர் அவவுக்குப் பிறகுதான்!
அண்ணா, அக்கா, தம்பி தங்கை
இருந்தால்தானே அவர்களை நீ கேட்க?
உன்னை ஒன்றை - ஒன்றே ஒன்றைப் பெற்றுவிட்டே
ஒப்பாரி வைக்கிறாள் உன்னாத்தை!
கண்ணே! கத்திக் கத்திக் களைத்துப் போகாதேயடா(டி)!
காலையில் கரைத்து வைத்த பால் இருக்கிறது!
உனக்கு ஆக்கிய சாப்பாடு அப்படியே 'பிறிஜில்' இருக்கிறது!
அதற்கிடையில் 'கக்கா' செய்திடாதே கண்ணே!
இல்லையென்றால் 'பம்பஸ்'சோடுதான் படுத்துறங்குவாய்!
அதனையும் மீறினால் உன்னம்மா வந்துதான்
அதனை அவட்டெறிவாள்.
கண்ணே! கத்திக் கத்திக் களைத்துப்போகாதேயடா(டி)!
கத்திய களைப்பிலேனும் கண்ணுறங்கடா(டி) என் செல்வமே!

தாலாட்டுப் பாடல் அடைந்த பரிணாம வளர்ச்சி வீட்டின் விளக்காக இருந்த தாய்மாரின் வாழ்க்கைமுறையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பதும், எத்தனை எத்தனை புதிய சவால்களுக்கு அவர்கள் முகம் கொடுக்கவேண்டி உள்ளது என்பதும் ஓரளவுக்கேனும் புரியும்.

### 'அவர்கள்' பார்வையில் 'இவர்கள்'?

1987ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட சொல்லாத சேதிகள் என்ற கவிதை நூலில் ஈழத்தில் உள்ள 12 பெண் கவிஞர்களால் 25 கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அதில் அ. சங்கரியின் கவிதை முதல் கவிதையாக 'அவர்கள் பார்வையில்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அக்கவிதையில் இன்றைய உலகில் பெண் எவ்வாறு பார்க்கப்படுகிறாள் என்பதைக் கணித்துக்கொள்ளலாம்.

"அவர்கள் பார்வையில்
எனக்கு முகமில்லை, இதயமில்லை
ஆத்மாவுமில்லை.
அவர்கள் பார்வையில்
இரண்டு மார்புகள், நீண்ட கூந்தல்



சிறிய இடை, பருத்த தொடை இவைகளே உள்ளன.
சமையல் செய்தல், படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல், பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள்.
கற்புப் பற்றியும், மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது உடலையே நோக்குவர்.
கணவன் தொடக்கம் கடைக்காரன் வரை
இதுவே வழக்கம்."

### பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்கின்றன

பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்கு நூற்றாண்டு விழாவும் கொண்டாடியாயிற்று! ஆயினும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களுக்கும், வன்முறைகளுக்கும் உள்நாட்டு நிலமைகளைப் பொறுத்தவரை வயது ஏறிக்கொண்டு போகிறதே தவிர பெண்களின் மாண்பும் மரியாதையும் உரிமைகளும் மதிக்கப்படுகிறது என்பது பெரும் கேள்வியாகவே தொக்கி நிற்கிறது! ஆம், 'பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும்' எனச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. எனினும் எக்காலத்தையும்விட போர்க் காலத்திலும் (During the War), போரின் பின்னான காலத்திலும் (Post-War Period) பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது – விடப்படுகின்றன என்பதாகவே தெரிகிறது. இல்லையென்றால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஏன் எப்போதும் கண்டிராத தொகையாகத் தொடர்ந்து இடம்பெறவேண்டும்?

### போரின்போதும் போரின் பின்னரும் பெண்கள் சந்திக்கும் சவால்கள்

2010ஆம் ஆண்டின் இறுதியில் போரினால் வடகிழக்கில் 89,000 கணவனை இழந்த பெண்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் வடக்கில் 40,000 கிழக்கில் 49,000 பேர் கணவனை இழந்த பெண்களாவர். கணவனை இழந்த இப்பெண்களில் 12.000 பேர் 40 வயதுக்குக் குறைந்தவர்கள். மேலும், இத்தொகைகளை வைத்துக்கொண்டு போரினால். இவ்வளவு தொகைப் பெண்கள்தான் தங்கள் கணவர்களை இழந்திருக்கிறார்கள் என்று இவ்வெண்ணிக்கையை மட்டுப்படுத்திவிட முடியாது. ஏனெனில் அரசியல் காரணங்களின் நிமித்தம் கைதிகளாகவோ அல்லது தடுப்புக்காவலிலோ இவர்கள் தடுத்துவைக்கப்பட்டு இருக்கலாம் என்று எதிர்பார்த்தவண்ணம் காத்திருப்பவர்கள் இன்னும் ஒரு பெரும் தொகையினராக இருக்கிறார்கள் என்பதும் இங்கு கோடிட்டுக்காட்டத்தக்கது.

### பெண்களின் மாண்பு மதிக்கப்படவேண்டும்

2013ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 22ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கணவனை இழந்த பெண்களுக்கான மாநாடு ஒன்று அரசசார்பற்ற நிறுவனமான ***விழுது*** ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நடத்தப்பட்டிருக்கிறது. வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட கணவனையிழந்த பெண்களை ஒன்றுகூட்டி, யுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் வாழ்க்கை பற்றியும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர். அக்கலந்துரையாடலில் முதலில், பெண்கள் - தாய்மார் - மனைவிமார் சமுதாயத்தில் சமத்துவமின்றி நடத்தப்படுகின்றமையும், இளக்காரமாக கருதப்படுகின்றமையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அடுத்து, வெவ்வேறு பதிவுகளுக்காக ஆண் அலுவலர்கள் தங்கள் இல்லங்களைத் தரிசிப்பதும், நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறும் கடனைக் கட்ட முடியாதபோது தாம் பாலியல் உறவுக்கு நிர்ப்பந்திக்கப்படுவதையும் கோடிட்டுக்காட்டியுள்ளனர். மேலும், பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பெண் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஆகியவை மேற்சொன்ன மாநாட்டில் வெளிக்கிளம்பிய இன்றைய பெண்கள் சந்திக்கும் சவால்களில் சிலவாகும்.

### கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்


மூன்று தசாப்த காலமாகப் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட கொடுமையான ஓர் உள்ளாட்டு ஆயுதப் போர் வெளிநாடுகளின் தலையீடுகளுடன் கொடூரமான முடிவைச் சந்தித்து ஐந்தாண்டுகள் நிறைவுற்றிருக்கிறது. இப்போராட்டத்தில் பெண்கள் மிகவும் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். எனவே, பெண்களின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்பட தொடர் விழிப்புணர்வுகளைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் சென்று சேரும்படி ஏற்படுத்தல் வேண்டும். பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் நிறுத்தப்பட செயல்திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். பாதிப்புற்ற பெண்களுக்கான ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். ஆடம்பர கோயில் கோபுரங்களையும் ஆலய முகப்புகளையும் கட்டி உயர்த்துவதில் கோடிப் பணத்தைக் கொட்டாமல் கணவனை இழந்த பெண்களுக்கு உறுதியான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்கு - மேம்படுத்துவதற்கு தொழிலகங்களை நிறுவுதல் வேண்டும். சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் வேண்டும். இவ்வாறான செயற்திட்டங்களை சமய – சமூக நிறுவனங்கள் முன்னெடுத்தல் வேண்டும். கணவனை இழந்த இளவயதுப் பெண்கள் மறுவாழ்வு பெறக்கூடிய நிலைகளை உருவாக்குதல் வேண்டும். அவர்கள் பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல் வேண்டும். இதுபோன்ற நற்திட்டங்களை முன்மொழியவும் செயற்படுத்தவும் சமய – சமூக – அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும்.

(அதிர்வுகள் தொ..ட..ரு.....ம்.... கருத்துக்களுக்கு: anpuomi@yahoo.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான தாக்குதலை மன்னார் சர்வமதப் பேரவை கண்டிக்கிறது!

## மன்னார் சர்வமதப் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரின் முழு வடிவம்



சிங்கள பௌத்த தீவிரவாதக் குழுவான பொதுபலசேனா மற்றும் இவர்களின் ஆதரவாளர்களினால் இவ்வாண்டு யூன் மாதம் அளுத்கம, பேருவளை, வெலிபன்ன மற்றும் தர்கா நகர் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட திட்டமிட்ட வன்முறைத் தாக்குதல் சம்பவங்களை மன்னார் சர்வமதப் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து தெகிவளை, குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முஸ்லிம் மக்களின் வீடுகள், வழிபாட்டுத் தளங்கள், வியாபார நிலையங்கள் போன்றவை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அளுத்கம மற்றும் வெலிபன்ன வன்முறைச் சம்பவங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டும், 80 பேர் காயப்பட்டும் உள்ளனர். இச்சம்பவங்களோடு தொடர்புடைய சிலர் கைதுசெய்யப்பட்டிருந்தாலும், அவர்களில் பலர் உடனே விடுதலை செய்யப்பட்டதோடு பொதுபல சேனாவின் தலைவர்களும் அவர்களின் நெருங்கிய ஆதரவாளர்களும் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் தமது வெறுப்பைத் தூண்டும் நடவடிக்கைகளையும், பௌத்த தீவிரவாத நிகழ்ச்சிநிரலையும் தொடர்ந்துகொண்டிருக்கின்றனர். தொடர்ந்தும் பள்ளிவாசல்கள் கல்லெறிக்கும், அழிவுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களின் வீடுகள், வியாபார நிலையங்கள் தாக்குதலுக்கும் சேதத்துக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளையிலும் கலவரம் தொடர்ந்துகொண்டிருந்தது. கலவரத்தில் ஈடுபட்டிருந்தோரை தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முயற்சிக்காமல் பாதுகாப்புப் படையினர் வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தனர். அப்பாவியான ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் போன்றோர் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடைபெறலாம் என்ற அச்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்தப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் பிரசன்னமாக இருந்த நிலையில் வன்முறைகள் தொடர்ந்ததையிட்டு நாம் ஆழ்ந்த வேதனையடைகிறோம். வன்செயல்களைத் தூண்டிவிடவும், முஸ்லிம் மக்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தவும் வன்முறைக் கும்பல் தொடர்ந்தும் இப்பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யூன் மாதம் 19ஆம் திகதி காலை பாணந்துறையில் வீதியோரம் ஒன்றில் தாக்குதலுக்குள்ளான நிலையில், கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், உடற்காயங்களோடு காணப்பட்ட வண. வட்டரக்க விஜித்த தேரர் தொடர்பான சம்பவத்தின்மட்டிலும் எமது ஆழ்ந்த அக்கறையைச் செலுத்துகின்றோம். வண விஜித்த தேரர் பொதுபல சேனாவை பகிரங்கமாக விமர்சிப்பவராகவும், பல்சமய ஒற்றுமைக்காகக் குரல் கொடுப்பவராகவும் இருந்துவந்துள்ளார். இதனால் பொதுபலசேனாவினாலும் அதன் செயலாளர் கலகொடதேர ஞானசாரர் மற்றும் உறுப்பினர்களினாலும் பல தடவைகள் பொது நிகழ்வுகளின்போது கடந்த இரண்டு வருடங்களில் தாக்குதலுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார். அடிக்கடி இடம்பெறும் இந்தக் கடுமையான அச்சுறுத்தலின் தன்மையை நோக்கும்போது பொதுபலசேனா அல்லது தேசியவாத மற்றும் தீவிரவாதக் கட்சிகளின் கட்டளையின்பேரில் அல்லது தூண்டுதலின்பேரில் இச்சம்பவம் இடம்பெற்றதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் இந்தச் சம்பவம் தனக்குத்தானே காயம் ஏற்படுத்திக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நாடகம் என்று காவல்துறைப் பேச்சாளர் கூறியிருக்கும் நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக (சுதந்திரமான தடயவியல் பரிசோதனையுடன்கூடிய) விசாரணையை மேற்கொள்ளுமாறு நாம் அரசாங்கத்தைக் கோரிநிற்கின்றோம். அரசியல் ஆதரவுடனோ அல்லது அரசியல்வாதிகளினாலோ இத்தகைய தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் தாமே தமக்கு ஊறுவிளைவித்துக்கொண்டதாக வாக்குமூலம் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள நிலையில் இச்சம்பவம் தொடர்பான காவல்துறைப்பேச்சாளரின் கூற்றும் இப்படிப்பட்டதாக இருக்கலாம் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

அதேபோன்று யூன் 21ஆம் திகதி பாணந்துறையில் நோ லிமிற் என்ற பசன் காட்சியறை தீயில் எரிந்து முற்றாக அழிந்த நிலையில் இத்தீ ஏற்பட்டதற்கான காரணம் தொடர்பாகவும் முழுமையான, பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளுமாறு கோருகின்றோம். அளுத்கம சம்பவத்தில் முஸ்லிம் மக்களின் வியாபாரத் தளங்கள் போன்றவை வன்முறைக்கும்பலின் தாக்குதலுக்கும், கொள்ளைகளுக்கும் இலக்கான சூழ்நிலையில் இந்தச் சம்பவம் ஒரு கும்பலின் திட்டமிட்ட தாக்குதலாக இருக்குமோ என்ற சந்தேகத்தை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

2013 மார்ச் மாதம் முஸ்லிம் ஒருவரின் பசன் பக் என்ற ஆடைக் களஞ்சியத்தில் வன்முறைக் கும்பல் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்றதொரு இன்னுமொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றமையை நினைவுகூருவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும். இத்தாக்குதல் சம்பவத்தில் பௌத்த பிக்குகளும் அவர்களின் ஆதரவாளர்களும் ஈடுபட்டிருந்தமையை வீடியோ பதிவு ஆதாரங்களின் மூலம் அறியமுடிகிறது. இவர்களில் சிலர் பின்னர் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள். இச்சம்பவத்தைத் தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்த காவல்துறையினரின் கையாலாகத்தனத்தையிட்டு நாம் கவலையடைவதோடு, அப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை இனியும் எடுக்காமல் இச்சம்பவம் தொடர்பாகப் பாகுபாடற்ற, சுதந்திரமான விசாரணையை நடத்துமாறு அதிகாரிகளை நாம் கோருகின்றோம். இத்தகைய சம்பவங்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் காண்பது மிகவும் அவசரமான விடயம் என்றும், இது அதிகாரிகளின் மிக முக்கியமான கடமை என்றும் நாம் உறுதியாக நம்புகிறோம்.

வண. விஜித தேரர் தொடர்பான தாக்குதல் சம்பவம், நோ லிமிற் தீ விபத்துச் சம்பவம் போன்றவற்றிற்கான காரணங்களையும், விசாரணை முடிவுகளையும் சந்தேகத்திற்கிடமின்றி தகுந்த ஆதாரங்களுடன் மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் முஸ்லிம் சமூகத்துடன் எமது ஒன்றிப்பை வெளிப்படுத்துவதோடு, தமது அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தவர்களுக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். உயிரிழப்பு ஏற்பட்ட குடும்பங்களுக்கும், மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டவர்களுக்கும், தாக்குதலுக்குள்ளானவர்களுக்கும் உரிய நிவாரணத்தை வழங்கும்படியும் அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

### கலாமன்றங்களுக்கிடையில் நடைபெற்ற பாரம்பரியக் கலைகளுக்கான போட்டியில்

# மாகாண மட்டத்தில் மன்னார் மாவட்டம் முதலிடம்

வடமாகாண ஆளுனர் செயலகத்தின் கலாச்சாரப் பிரிவால் நடத்தப்பட்ட வடமாகாணத்தில் உள்ள கலாமன்றங்களுக்கிடையிலான பாரம்பரியக் கலைகளுக்கான போட்டியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் கூத்துவழி நடனப் போட்டியில் சிறுவர் பிரிவில் முதலாம் இடத்தையும், வளர்ந்தோர் பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. ஆவணம் கார்மேல் கலாமன்றம் கூத்து நாடகப் போட்டியில் வளர்ந்தோர் பிரிவில் முதலாம் இடத்தையும், கூத்துவழி நடனப் போட்டியில் சிறுவர் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

கூத்து நாடகங்களில் உள்ள ஆட்டங்களை எடுத்து 8 - 10 நிமிடங்களுக்கு அளிக்கை செய்யும்படியான 'கூத்துவழி நடனம்' என்ற பெயரில் ஒரு போட்டி இடம்பெற்றது. இதைவிட கூத்து நாடகப் போட்டியும், இசை நாடகப் போட்டியும் இடம்பெற்றன. இப்போட்டிகள் எல்லாமே சிறுவர் பிரிவு, வளர்ந்தோர் பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்பட்டன.

வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள கலாமன்றங்களுக்கிடையில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. முதலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மட்டப் போட்டிகள் இடம்பெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண மட்ட இறுதிப் போட்டியில் பங்கெடுத்தன. இந்த மாகாண மட்ட இறுதிப்போட்டியிலேயே மேற்படி மன்னார் மாவட்டத்தில் உள்ள இரண்டு கலாமன்றங்கள் மூன்று முதலிடங்களையும் ஒரு மூன்றாம் இடத்தையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளன. முதலிடங்களைப் பெற்ற நிகழ்வுகளின் படங்கள் சிலவற்றை கீழே காணலாம்.













### மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில்

# 'நெஞ்சுவிடும் தூது' கவிதை நூல் வெளியீட்டு விழா



மன்னாரைச் சேர்ந்த ரஜீராஜ் என்பவரின் 'நெஞ்சுவிடும் தூது' என்னும் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா மன்னார்த் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வினோநோகராதலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான், மன்னார் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த கவிஞர் திரு. ந. சுந்தா, மன்னார் எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி ஆலயக்குரு சிவஸ்ரீ வீ. பாபுக் குருக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்..

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## மாந்தை மண்ணில் மரணித்தது?



ஓ மானிடனே!
மனித உள்ளங்களை மண்ணுக்குள் புதைத்த
மதிகெட்ட மானிடனே! - நீ
கூத்தினை ஆடிவிட்டு இன்று கும்மாளம் போடுகின்றாய்.
அக்கிரமம் யாவும் அகிலமெங்கும் ஒலிக்கிறது
சாட்சி இல்லை என்றிருந்தாய்; சாகசமும் பல புரிந்தாய்
உண்மை என்றும் உதிர்வதில்லை என்பதை
மாண்டவர்கள் உனக்கு உணர்த்திவிட்டனர்.
மறைந்ததாய் நினைத்தாய்; மானிடத்தைப் புதைத்தாய்.
எலும்புக்கூடுகள் இவர்கள் - உனக்கு
எமன்களாய் எழுந்தனர்.
காணாமல்போனவரை நாம் தேட
எமக்குக் காத்திருப்பதோ எலும்புக்கூடுகள்!
கலிகால யுகத்தினிலே காணக்கிடைப்பதோ கல்லறைகள்
வாய் திறந்து கேட்பது யார்?
கேட்டுவிட்டால் பிழைப்பது யார்?
கூடிவாழ்ந்த உறவுகளை எலும்புக்கூடாய் மாற்றியது யார்?

தோண்டத் தோண்ட துப்பு வருமா?
தொலைந்த உறவுதான் திரும்ப வருமா?
மனித மாண்பைப் புதைத்த கூட்டம்
மண்ணை விட்டுத்தான் ஓடிவிடுமா?

மறைந்த உண்மை யாவும் மறுபடியும் வேண்டும்.
சதிசெய்து சாவடித்தவன் சட்டத்தின்முன் வரவேண்டும்.

நீதி தேவதையின் நியாயம் வேண்டும்
மிச்சமுள்ள எமக்கோர் நிம்மதியான வாழ்வு வேண்டும்.

*நி. ஜான்சி,*
*புனித வியாகுல அன்னை ஆலயம், அடம்பன்.*

## உண்மை நட்பின் இலக்கணம்



கண்களில் ஒரு துளி கண்ணீர் விழுந்தாலும்
ஏந்துவதற்கும் தாங்குவதற்கும் தேவை நல்ல நட்பு
பூமியின்மீது பாசத்தின் மழை பொழிவது நட்பு
கழுத்தளவு தண்ணீரோடு நீ போர் புரியும்போது
உன்னைக் காப்பதே அன்பான நட்பு
எதிர்பார்ப்பு எதுவுமே இல்லாமல்
தன்னைத் தியாகம் செய்வதே உண்மையான நட்பு!

*- செ. இருதய நாதன் பறுனாந்து, முத்தரிப்புத்துறை*

## இளைஞனே எழுந்திடு

இளைஞனே எழுந்திடு!
வையகம் போற்றிட பணி புரிந்திடு'
சோர்ந்துகிடந்தால் சிலந்திவலைகூட சிறைக்கம்பிதான்.
தீய்க்கு வாழ்க்கைப்பட்டாலும்
விறகுகூட விட்டுவைக்கிறது அதன் சாம்பலை.
உனக்குப்பின் உயிர்வாழ என்ன வைத்திருக்கிறாய்?
உன்னைச் சுற்றிலும் எதிர்ப்புகள் இருந்தாலும் தளராதே
அச்சம் கொண்டால்
துளி நீரும் வெள்ளப் பெருக்காகவே தென்படும்.
தீக்குச்சியும் எரிமலையாகவே தென்படும்.

அன்பு இளைஞனே, யுவதியே!
வானத்தைத் தொட்டுப்பார்க்கமுன்
உன் மனதைத் தொட்டுப்பார்.
நம்பிக்கை வானத்தையும் தாண்டச்செய்யும்.
வானினையும் தாண்டிவிடலாம்.
பூமியின் ஆழத்தையும் அளந்துவிடலாம்.
சூரியனையும் தொட்டுவிடலாம்
நம்பிக்கை உன்னிடத்தில் இருந்தால்.

*அ. கயல்விழி, வேப்பங்குளம், வவுனியா.*

# சிறுகதை

கி. அ. ஜெக்குலின் விதுனா,
கோவில் வீதி, உயிலங்குளம்,
மன்னார்.

## பாசம்

அது ஓர் அழகிய கிராமம். அங்கு ஓர் வீட்டில் கூட்டுக் குடும்பம் ஒன்று சந்தோசமாக வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்தில் அம்மா, அப்பா, பிள்ளைகள், தாத்தா, பாட்டி ஆகியோர் வசித்து வந்தார்கள். இவ்வாறு தமது பிள்ளைகளுடன் இராமசாமியும், சாந்தியும் கண்டிப்பாகவும், சந்தோசமாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இச்சந்தோசமெல்லாம் நெடுங்காலம் அவர்களுக்கு நீடிக்கவில்லை. நல்லவர்கள் எல்லாரும் நெடுநாள் உயிர்வாழ முடியாது என்பது போல அக்குடும்பத்திலும் ஒரு துன்பம் ஏற்பட்டது.

அவர்களின் அப்பா இராமசாமி ஒரு சங்கக் கடையொன்றில் வேலைசெய்து வந்தார். அவர் கடைக்கு வருவோரிடம் மிகவும் பாசமாகவும் அன்பாகவும் பழகுவார். கடைக்கு வருபவர்களை உற்சாகமாகக் கவனிப்பார். அனைவரும் இவர் வேலை செய்யும் கடையையே தேடி வருவார்கள்.

இவர் ஏழைகள்மீது மிகவும் இரக்கம் கொண்டவர். இவர் வேலை செய்த வேலைத்தளத்தில் வயோதிபர் ஒருவரும் வேலைசெய்து வந்தார். அந்த முதியவருக்கு சொந்தம் என்று சொல்ல எவருமே இல்லை. இதையெல்லாம் அறிந்து இராமசாமி இந்த முதியவரைத் தனது வீட்டிற்கு அழைத்துவந்து பராமரித்து வந்தார். இவ்வாறு பல ஏழைகள்மீது மிகவும் எல்லையற்ற கரிசனை கொண்டவராக இவர் விளங்கினார். ஆனால் கடவுள் இராமசாமியை நெடுநாள் வாழவிடவில்லை. 2007ஆம் ஆண்டு போர் நடந்துகொண்டிருந்தது. அப்போருக்கு இவர் இரையாக போகிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. வழமைபோல் இவர் துவிச்சக்கர வண்டியில் அந்த வயோதிபரையும் ஏற்றிக்கொண்டு வேலைக்குச் சென்றார். வேலை முடிந்ததும் வீட்டிற்கு வரும்வழியில் ஆள்மாறாட்டம் காரணமாகச் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். இதை எல்லாம் ஒளிந்திருந்து அந்த வயோதிபர் பார்த்தார். உடனடியாக தகவலை வீட்டுக்குத் தெரிவித்தார்.

அப்போது சாந்திக்கு உயிரே போய்விடும்போல் இருந்தது. ஆனால் தன் மூன்று பிள்ளைகளையும் தானே வளர்க்க வேண்டும் என்பதால் அனைத்தையும் தாங்கிக்கொண்டாள்.

மிகவும் கஷ்டப்பட்டு வேலைகள் தேடி அலைந்து தன் பிள்ளைகளைப் படிக்கவைத்தாள். தமது அம்மாவின் கஸ்டங்கள் அனைத்தையும் புரிந்துகொண்ட பிள்ளைகள் தங்கள் அப்பாவின் அன்பு கிடைக்காவிட்டாலும் தமது அம்மாவிடம் இருந்து தேவையான பாசம் தங்களுக்கு நன்றாகக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார்கள். அப்பிள்ளைகள் மூவரும் நன்றாகப் படித்தார்கள். அவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது. அதன் பின்னர் அவர்களுக்கு நல்லதொரு வேலை கிடைத்தது. அதன்பின் அவர்கள் தங்கள்மீது பாசத்தை அள்ளிப் பொழிந்து தங்களைப் படிக்கவைத்த தாயை நன்றாகக் கவனித்து வந்தார்கள்.

# கொஞ்சம் சிரிங்க

**ஒருவர்** : வெளியே "உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது" என்று எழுதிப்போட்டிருக்கிறேன். ஏன் உள்ளே வந்தாய்?
**மற்றவர்** : உத்தரவு வாங்குவதற்காகத்தான் உள்ளே வந்தேன்.

..............................................

**மகன்** : அப்பா உங்களுக்கு கடிதம் வந்திருக்கு.
**அப்பா** : எங்கே இருந்து வந்திருக்கு?
**மகன்** : தபால்காரன் கையில் இருந்துதான்.
*எஸ். சுஜா சில்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.*

**நண்பர்** : பொண்ணுட அப்பா றொம்ப அப்பாவிடா!
**மற்றவர்** : ஏன்டா?
**நண்பர்** : "மாப்பிள்ளைக்கு பல சின்ன வீடுகள் இருக்கிறது" என்று சொன்னேன். அதுக்கு அவர் "எவ்வளவு வாடகை?" என்று கேட்டார்.
*யூ. நிர்மலின் சுகன்யா பெனான்டோ, முத்தரிப்புத்துறை.*

**அப்பா** : உன் வகுப்புல புதுசா ஒரு மாணவன் அட்மிசன் ஆகியிருக்கிறானாமே.
**மகன்** : ஆமாப்பா! உங்களுக்கு எப்படி இது தெரியும்?
**அப்பா** : 27வது ரேங்ல இருந்த நீ 28வது ரேங் வாங்கியிருக்கிறாயே அதுதான்.

..............................................

**மனைவி** : ஏங்க உங்கள கழுதையின்னு திட்டினாங்க. உங்களுக்கு கோபம் வரவில்லையா?
**கணவன்** : வந்துதே! எப்படி ஒரு உதை விட்டேன் பாத்தியா!
*ஆ. நியூட்டன், குருவில் வான், வட்டக்கண்டல், மன்னார்.*

**நீதிபதி** : நீ உன்னோட மனைவிகூடச் சேர்ந்து வாழனும். மறுத்தால் இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை. என்ன சொல்றே?
**குற்றவாளி** : இரண்டாவதாக நீங்க சொன்ன தண்டனையை மனப்பூர்வமாக ஏத்துக்கிறேனுங்க.
*தே. நிஷாளினி, தி.க.மடம்*

# மன்னா விளம்பரப் பலகை

ஒரே குறிக்கோள், அளவற்ற ஊக்கம், தளர்வற்ற நெஞ்சுறுதி,
நேர்மையான பாதை இவையே வெற்றிக்கான படிக்கற்கள்.
*- ஆ. டயாளினி, மாதிரிக் கிராமம், வங்காலை.*

- கடவுள் சோதிப்பது எல்லோரையும் அல்ல; சாதிக்கத்துடிக்கும் புத்திசாலிகளை மட்டும்தான்.
- ஓடும்போது விழுவோம் என்று நினைப்பவனைவிட விழுந்தாலும் எழுந்து ஓடலாம் என்று நினைப்பவன் வெற்றி பெறுகின்றான்.
- நேரத்தை வீணாக்கும்பொழுது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல; உன் வாழ்க்கை.
- எவன் ஒருவன் அதிகமாகச் சிரிக்கின்றானோ அவன் மனதில் சிரிப்பதைவிட அதிகமான காயம் இருக்கும்.

*ஸ். டினோறி அச்சங்குளம், நானாட்டான்.*

"உனக்கு உதவிசெய்பவர்களை உன் வாழ்நாள்களில் நீ மறக்கக்கூடாது. மேலும் அவர்களது துன்பத்தில் நீ முந்நின்று உதவிசெய்வது மிக நன்று."
"திருவிவிலியத்தில் உள்ள இறைவனின் ஒவ்வொரு வார்த்தைகளிலும் தேனில் உள்ள இனிப்பு போன்று சுவை உள்ளது."
*ஜெ. றுமேஷினி, பாலைக்குழி, நானாட்டான்.*

அன்னை மரியாவை அன்பு செய்கிறவன் தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்வான்.
அவரை அதிகமாக அன்பு செய்கிறவன் புனிதனாகிவிடுவான்.
(அருளாளர் ஜேம்ஸ் அல்பேரியோனே)
*கைசின் நிலோஜினி, கொக்குப்படையான்.*

உங்களால் மறக்கமுடியாத மற்றவர்களின் குற்றங்களை மன்னித்துவிடுங்கள். உங்களால் மன்னிக்க முடியாத குற்றங்களை மறந்துவிடுங்கள்.
*ஆ. நியூட்டன், குருவில் வான்,*
*வட்டக்கண்டல், மன்னார்.*

# சிறுவர் பொழிவு



செ. யேசுதாசன் குருஸ்,
தரம் - 8A, மன்/புனித ஆனாள் ம.வி, வங்காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ புனித ஆனாள் ம.வி, வங்காலை.

01. பங்கு ஆலயப் பெருவிழாவின்போது வழங்கப்படும் ஆன்மீகச் செயற்பாடுகள் எவை?
கருத்தரங்குகள், மறையுரைகள், சிரமதானச். செயல்கள், ஒப்புரவு அருட்சாதன வழிபாடு, குருக்கள் பங்குக் குடும்பங்களைத் தரிசித்தல், பக்தி முயற்சிகள், நற்கருணை ஆராதனை போன்றவை.
02. திருவழிபாட்டின் நோக்கங்கள் எவை?
- இறைவனுக்கு ஆராதனை செலுத்துதல்.
- மனிதரைப் புனிதப்படுத்தல்.
- கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
03. திருவழிபாட்டு ஆண்டு எத்தனை வாரங்களைக் கொண்டது?
52 வாரங்களை
04. திருவழிபாட்டு ஆண்டுக் காலங்கள் எத்தனை? அவை எவை? ஐந்து. அவையானவன : திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், தவக்காலம், பாஸ்கா காலம், பொதுக்காலம்.
05. ஆண்டின் பொதுக்காலம் எத்தனை வாரங்களைக் கொண்டுள்ளது?
கிறிஸ்து பிறப்புக் காலத்துக்கும் விபூதிப் புதனுக்கும் இடைப்பட்ட 34 வாரங்களைக் கொண்டுள்ளது.
06. பொதுக்காலத்தில் யாருடைய விழாக்கள் கொண்டாடப்படுகிறது?
கன்னி மரியாள் மற்றும் புனிதர்களின் விழாக்கள்.
07. யாக்கோபு திருமுகத்தில் கூறப்பட்டுள்ளபடி இரக்கம் காட்டாதோருக்கு எத்தகைய தீர்ப்புக்கிடைக்கும்.?
இரக்கமற்ற தீர்ப்பு.
08. நற்கருணையின் மேன்மைபற்றி க.தி.ம (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு) எண். 1393இல் கூறப்பட்ட கருத்தை எழுதுக.
நற்கருணை எம்மைப் பாவத்திலிருந்து விலக்கிக் காக்கிறது. நற்கருணை விருந்தில் நாம் உண்ணும் கிறிஸ்துவின் உடல் எங்களுக்காகவே கையளிக்கப்பட்டது. இரத்தம் பாவமன்னிப்புக்காகவே சிந்தப்பட்டது. இதனிமித்தம் நற்கருணை கடந்த காலங்களிலிருந்து நம்மை விடுவித்து பாதுகாத்து கிறிஸ்துவோடு இணைக்கிறது.
09. "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி. ஆட்டுக்குட்டியாம் இவரே ..................? உலகின் பாவத்தைப் போக்குபவர்.
10. "அரசன் என்று நீ சொல்கிறீ. உண்மையை எடுத்துரைப்பதே என்பணி ............" இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
இயேசுவால் - பிலாத்துவிற்கு
11. யோவான் 8:31-32 இன்படி இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கிக் கூறியது என்ன?
"என் வார்த்தைகளை நீங்கள் கடைப்பிடித்துவந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள்; உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்."
12. "தந்தையே என் ஆன்மாவைக் காத்து, விரைவில் என்னைப் புனிதராக்குங்கள்" என்று செபித்தவர் யார்? டொமினிக் சாவியோ
13. "இளவரசரே", "பெருமதிப்புக்குரியவரே" என்று தன்னை யாரும் அழைப்பதை விரும்பாதவர் யார்?
புனித அலோசியஸ் கொன்சாகா (ஞானப்பிரகாசியார்)
14. பத்து மொழிகளைப் பேசும் ஆற்றலைப் பெற்றவர், 1936 ஆடித்திங்கள் 7ம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர். இவர் யார்? அருட்தந்தை பீற்றர்பிள்ளை.
15. ஒரு சிந்தனையாளராக, ஆய்வாளராக, படைப்பாளராக, ஆலோசகராக, விரிவுரையாளராக, எழுத்தாளராக, மொழி பெயர்ப்பாளராகத் திகழ்ந்தவர் யார்? திரு. கொட்வின் மெண்டிஸ்
16. "என் ஆண்டவரே, என் தேவனே" என விசுவாச அறிக்கை பகர்ந்தவர் யார்? தோமா (தோமையார்)
17. "ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம்" எனக் கூறியவர் யார்?
யூதத் தலைவர்களுள் ஒருவரான நிக்கதேம்.
18. சிறையில் இருந்த திருத்தூதருக்கு ஆண்டவரின் தூதர் கூறியது என்ன?
"நீங்கள் போய்க் கோவிலில் நின்று வாழ்வுபற்றிய வார்த்தைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள்."
19. "வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" யாரால் யாரிடம் இவ்வாறு கேட்கப்பட்டது? இயேசுவால் எம்மாவுஸ் சீடரிடம்.
20. நற்கருணையின் பொதுப் பண்பு யாது?
தேவநற்கருணை என்ற உயிருள்ள அப்பத்தினால் எம்மில் உள்ள கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வு ஊட்டம்பெறுகிறது.
21. அருளடையாளங்களின் பிறப்பிடம் யார்? இயேசு. (இயேசுவின் விலாவைப் படைவீரன் ஈட்டியால் குத்தியபோது தண்ணீரும் இரத்தமும் வெளிப்பட்டன. யோவான் 19:34).
22. தண்ணீரும், இரத்தமும் எதனைக் குறிக்கின்றது?
தண்ணீர் திருமுழுக்கையும், இரத்தம் நற்கருணையையும்.
23. நமது திருச்சபை ஓய்வுநாளை எவ்வாறு கொண்டாடுகிறது?
இயேசுக்கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமை அன்று உயிர்த்தெழுந்தார். இதனால் தொடக்ககாலத் திருச்சபை ஞாயிற்றுக்கிழமையை ஆண்டவரின் நாளாகக்கருதி அதை ஓய்வுநாளாகக் கொண்டாடியது.
24. மறைமாவட்டப் பங்குக்குருக்களின் பாதுகாவலர் யார்? புனித ஜோன் மரிய வியான்னி.
25. சிறையிலிருந்த கைதிக்குப் பதிலாக தன்னுயிரைக் கொடுத்தவர் யார்? மச்சிமிலியன் கோல்பே
26. பரிசுத்த ஆவியின் திருவிழாவிற்கு அடுத்துவரும் விழா எது? பரிசுத்த தமதிரித்துவிழா (மூவொரு கடவுளின் விழா).
27. பழைய ஏற்பாட்டிலுள்ள ஞான நூல்கள் எனப்படும் கவிதை நூல்களை எழுதுக?
யோபு, திருப்பாடல், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்.
28. "தந்தையே விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்." இவை திருவிவிலியத்தில் எப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது? மத்தேயு 11:25
29. குடும்ப செபத்தின் பயன்கள் 5 தருக?
- குடும்பத்தில் ஒற்றுமை, அமைதி நிலவுகிறது.
- குடும்பத்தில் உள்ளவர்களை ஏற்றுக்கொள்ளவும் புரிந்துகொண்டு வாழவும் அதற்குரிய மனப்பக்குவத்தைக் கொடுக்கிறது.
- குடும்பத்தில் அன்புறவை ஏற்படுத்துகிறது.
- குடும்பம் ஒரு குட்டித்திருச்சபையாக மாறுகின்றது.
- கூடிச்செபிக்கும் குடும்பம் விசுவாசத்தில் வளர்கிறது.
30. கத்தோலிக்க திருச்சபையிலே பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு மன்றாட்டுமுறைகளில் அனேகரின் உள்ளங்களைக் கவர்ந்த பொதுமக்களின் மன்றாட்டாக அமைவது எது? திருச்செபமாலை.
31. பாஸ்கா விழாவைப் பெரிய ஞாயிறு என அழைத்தவர் யார்? புனித அந்தோனியார்
32. இறையாட்சியின் உட்பொருளானது வளர்ந்து விரிந்து அனைவருக்கும் பலன்கொடுப்பதைக் குறிக்கும் உவமை எது? கடுகுமணி உவமை.
33. நற்கருணை பெற்றுக்கொள்வதால் இயேசு வழங்கும் ...................... பெற்றுக்கொள்கிறோம். - நிலை வாழ்வை.
34. பத்திலொரு பங்கு காணிக்கை செலுத்துவது ஒரு கிறிஸ்தவனின் கடமையாகும். இன்று திருச்சபையால் இது எவ்வாறு கைக்கொள்ளப்பட்டு வருகிறது? உதாரணம் தருக?
- திருச்சபைக்குப் பொருளுதவி செய்தல்
- குருக்களைத் தாபரித்தல்
- விளைச்சலில், வருமானத்தில் பங்குகொடுத்தல் போன்றன.
35. அன்பின் பண்புகள் 5 தருக?
பொறுமையுள்ளது, இழிவானதைச் செய்யாது, தீங்கு நினையாது, தன்னலம் நாடாது, உண்மையில் அது மகிழும்.
36. 1947ஆம் ஆண்டு கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக நியமனம் பெற்றவர் யார்?
கர்தினால் தோமஸ் கூறே
37. மத்திய அமெரிக்காவில் எல்சல்வடோர் நாட்டிலே இராணுவக் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்ததற்காக இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட பேராயர் யார்?
பேராயர் ஒஸ்கார் றொமேறோ
38. "அன்புக்குச் சிறந்த பதில் அன்பே" என்பதை விருதுவாக்காகக் கொண்டவர் யார்? இவரது பெற்றோர் யார்?
குழந்தை இயேசுவின் புனித தெரேசாள்.
பெற்றோர் - லூயிஸ், செலி.
39. நம்பிக்கையின் அடிப்படையாக இருப்பது எது?
கடவுளின் வல்லமை.
40. 2 பேதுரு 1:3 இன்படி கடவுள் எதனால் எம்மை அழைத்துள்ளார். எனக் கூறப்படுகிறது?
தமது மாட்சியாலும், ஆற்றலாலும்.

# உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 131

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் எரேமியாவின் புத்தகம் 33ஆம் அதிகாரத்திலிருந்து 41ஆம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

யோகியாவின் மகன் செதேக்கியா யூதாவின் அரசனாக ஆண்ட நாட்களில் எவ்வாறு கல்தேயரிடம் அடிமைப்படுத்தப்பட்டான்; இறைவாக்கினர் எரேமியா மூலமாய் இறைவன் உரைத்தவைகளுக்கு செவிமடுக்காது கடவுளுக்கு எதிராக வாழ்ந்ததனால் அவர்கள் பபிலோனில் வாழ்ந்த கல்தேயரின் மன்னனான நெபுக்கத்னேசர் என்பவரிடம் அடிமைப்படுத்தப்பட்ட விடயங்கள் போன்றவை நாம் வினாவுக்காகத் தெரிந்துகொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.

இம்மன்னனால் எரேமியா சிறைப்படுத்தப்பட்டிருந்தார். அவ்வேளைகளிலும் கடவுளின் வாக்கு அருளப்பட்டதால் எரேமியா தம் தூதுவர் ஒருவரால் தமக்கு அருளப்பட்ட இறைவாக்குகளை எடுத்துரைத்தும் மக்கள் கல்நெஞ்சராய் இறைவார்த்தைக்குப் பணிந்து நடக்க மறுத்தனர். கடவுளையும் அவர் வாக்குகளையும் துச்சமாய் எண்ணினர். அதனால் அவர்களின் நகரம் தீக்கிரையானது. மக்கள் பலர் மடிந்தனர். இன்னும் பலர் அடிமைகளாகப் பபிலோனுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். மன்னனும் கல்தேயரால் கொல்லப்பட்டான்.

**இனி எமது வினாக்களுக்குள் வருவோம்.**

01. மக்களின் நெறிபிறழ்ந்த வாழ்வுக்காக அவர்களைப் பபிலோனிய அடிமைத்தனத்திற்கு உட்படுத்தப்போவதாகக் கூறும் இறைவன் அவர்களுக்கு ஒரு நல்ல வாக்குறுதியையும் வழங்குகின்றார். அது என்ன?
02. எப்படிப் பாடியவாறு ஆண்டவர் இல்லத்திற்கு நன்றிப் பலிகளைக்கொண்டு மக்கள் செல்வர்?
03. அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்திலிருந்து இஸ்ராயேல் மக்களின் மூதாதையரை விடுவித்தபோது இறைவன் அவர்களோடு ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அவ்வுடன்படிக்கை என்ன?
04. இரேக்காபு வீட்டாரின் மக்கள் யாருடைய கட்டளைப்படி திராட்சை இரசம் பருகாமலும் வீடுகள் கட்டிக்கொள்ளாமலும் கூடாரங்களில் வாழ்ந்து வந்தார்கள்?
05. கடவுளின் வார்த்தைகளை எரேமியா சொல்லச் சொல்ல அதை ஏட்டுச் சுருளில் எழுதியது யார்? எதற்காக அது எழுதப்பட்டது?
06. எரேமியா பெனயமின் நாட்டு வாயிலை அடைந்தபோது செலேமியாவின் மகனான இரிய்யா ஏன் அவரைப்பிடித்து தலைவர்களிடம் கொண்டுசென்று நிறுத்தினான்?
07. பாழ்கிணற்றில் இறக்கப்பட்ட எரேமியாவை அரசனின் அனுமதி பெற்றுக் காப்பாற்றியவர் யார்?
08. பபிலோனிய மன்னன் நெபுக்கத்னேசர் தன் மெய்க்காப்பாளர் தலைவனான நெபுசரதானுக்கு எரேமியா பற்றிக் கொடுத்த கட்டளை என்ன?
09. எரேமியா மெய்க்காப்பாளர் தலைவன் நெபுசரதானால் இராமாவில் வைத்து விடுதலை செய்யப்பட்டபோது அவர் எங்கே சென்று வாழ்ந்தார்?
10. பபிலோனிய மன்னனினால் யூதாவுக்கு ஆளுனனாக நியமிக்கப்பட்டிருந்த கெதலியாவையும் அவனோடு இருந்தவர்களையும் வெட்டிக் கொன்றவன் யார்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 129 இற்கான கேள்விகளுக்கு 13 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**
எம். மேரி ஜெசில்டா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. ம. சுதர்சினி, உமன்கரி, நானாட்டான்.
2. செ. அஞ்சலா டயஸ், மரியாள் வீதி தாழ்வுபாடு.
3. வி. ஆன் செளமியா, 5ம் வட்டாரம், விடத்தல் தீவு.
4. எஸ். யூட் நிதர்சன், பெரிய கட்டைக்காடு, நானாட்டான்.
5. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
6. ம. தர்மிகா, இல.109 பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
7. செ. ரெத்தினம் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
8. றொ. றோஜினி, அ.வே.வீதி, பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
9. ஞா. ஜெனிபா, சாந்திபுரம், மன்னார்.
10. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## உலகக் கால்பந்தாட்டப் போட்டிகள் ........
முதலாம் பக்கத் தொடர்ச்சி

அனைத்து விளையாட்டுக்களும் 'பயிற்சிகள் மேற்கொள்ளுதல்', நேரிய வழிகளில் விளையாடுதல், எதிர்த் தரப்பினரையும் மதித்தல் என்ற மூன்று பாடங்களைக் கற்றுத்தருகின்றன என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த மூன்று பாடங்களையும் குறித்து சிறு விளக்கங்களையும் அளித்துள்ளார்.

எக்காரணம் கொண்டும் வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்று விளையாடுவது தன்னலத்தை மட்டுமே வளர்க்கிறது. மாறாக, உண்மையான வெற்றியடைய, எதிர்த்தரப்பினரையும் மதிப்புடன் நடத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உண்மையான உடன்பிறந்தோர் உணர்வுடன், அனைவரும் இந்த உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தை அனுபவிக்க நான் வாழ்த்துகிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிற்றர் (Twitter) பக்கத்தில் கடந்த யூன் 12ஆம் திகதி அன்று எழுதியுள்ளார்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.144

## மாற்கு நற்செய்தி முழுவதும் 1 முதல் 16 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | 10 |
| | 02 | | | | | | | 04 | 20 |
| | | | | | | 19 | 12 | | |
| | | | 14 | 09 | | | | | |
| | | | | 07 | | | | | |
| 03 | | | | | | | | | |
| | | 15 | | | | | | 13 | |
| | 17 | | | | | | | 06 | |
| | | | | 08 | | | | | |
| 05 | 18 | | | | | | | 16 | 11 |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

*குறிப்பு : குறுக்கெழுத்துப்போட்டி விடைகளை அனுப்பும்போது மன்னாவில் உள்ள பெட்டியையோ அல்லது அதிலுள்ள இடைவெளிகளை நிரப்பியோ அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதே போன்ற கட்டமைப்பை தயாரித்து விடைகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதில் உங்கள் பெயருடன் தபால் விலாசத்தை தெளிவாக எழுதி அனுப்பப்படாதது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

### இடமிருந்து வலம்

1. ஆதலால் .............. மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.
2. ............... இன்றி அவர் அவர்களோடு பேசவில்லை.
3. .............. பெருந் திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர்.
4. சீடர்கள் அவர் சொன்னதைக் கேட்டுத் ........... ப்புக்கு உள்ளானார்கள்.
5. "நீங்கள் இவர்களோடு எதைப்பற்றி ..............?" என்று கேட்டார்.
6. அவர் ............... வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?
7. எனினும் மக்கள் எல்லா இடங்களிலிருந்தும் .......... வந்துகொண்டிருந்தார்கள்.
8. இவர் .............. இயன்றதைச் செய்தார்.
9. கடவுளின் ................ யும் தெரியாது.

### வலமிருந்து இடம்

6. உடனடியாகத் தம் சீடருடன் படகேறித் ...... பகுதிக்குச் சென்றார்.
7. அவர் அவருடைய ......................... மகன்.
10. அப்போது நாங்கள் கண்டு .......................
11. அவர் என்றென்றும் தீராத ................. த்திற்கு ஆளாவார்.
12. மாலை வேளையில் கதிரவன் மறையும் நேரத்தில் ................ பேய் பிடித்தவர்கள் .................. கொண்டுவந்தார்கள்.
13. அவருடைய ......... குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்.
14. ................ ஏன் அவரை நம்பவில்லை எனக் கேட்பார்.
20. பரபா என்னும் ................. ஒருவன் இருந்தான்.

### மேலிருந்து கீழ்

1. .................... இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார்.
2. பலிப்பொருள் ................. தூய்மையாக்கப்படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர்.
4. அப்போது அவர் ................. மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார்.
10. அவர்கள் அவரைப்பார்த்து .......................
14. "............. மீட்புப் பெறமுடியும்?" என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.
15. "............. இவரைவிட்டு வெளியேப் போ" என்று இயேசு அதனை அதட்டினார்.

### கீழிருந்து மேல்

5. நகர் முழுவதும் வீட்டு ............... முன் கூடியிருந்தது.
7. மேலும் ................ "நீங்கள் கேட்பதைக் குறித்துக் கவனமாயிருங்கள்".
11. ................. ஓய்வு நாளில் செய்யக்கூடாததை ஏன் இவர்கள் செய்கிறார்கள்?" என்று கேட்டனர்.
12. அப்போது அவர்களும் .................. இருப்பார்கள்.
16. ஓய்வு நாள் .............. அவர் தொழுகை கூடத்தில் கற்பிக்க தொடங்கினார்.
17. அவர் .................. நின்ற ஒரு படகில் ஏறி அமர்ந்தார்.
18. ........... சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை.
19. இவர் ....................?" என்று ஒருவரொடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 142ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ப. மேரி பவித்ரா,
சவேரியார்புரம், சிலாவத்துறை.

**இரண்டாம் பரிசு:**
அ. பொறின் மயூரா, பெரிய குளம், பறப்பாங்கண்டல்.

**மூன்றாம் பரிசு:**
எ. டினோசன்,
சென் மேரிஸ் வீதி, அடம்பன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 84 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 73 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 142ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. வி. மேரி கலிஸ்ரா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
2. சி. கவிஸ்டன் கூஞ்சு, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
3. எ.எப் துஷானி, இல.209 தோ.வீதி, எய.ரவர் எமில் நகர், மன்னார்.
4. பி. றெமோனா பனுனாந்து, மாட்டிவீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
5. அ. ஆன் ஜெறோமி குருஸ், புனித ச.வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
6. யூ. யூடின் நிலைக்சனா, நெடுங்கண்டல், அடம்பன்.
7. அ. எப்சிபா, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
8. அ. செபஸ்ரியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
9. ப. ஆன் நிதுஷா, புதுக்கமம், உயிலங்குளம்.
10. திருமதி. ஜெயா பிரக்சி பீரிஸ், வங்காலை 6.
11. திருமதி. ரஜனி எட்வின், ஆசிரியர் சதுக்கம், உவமலை.
12. செ. ஜெபராஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
13. கி. ஆன் டிலாந்தி, அன்ரனிஸ் வீதி, 8ஆம் வட்டாரம், பேசாலை.
14. ந. அனஸ்ரினா, தி.க.மடம், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
15. யோ. டனியா, 4ம் வட்டாரம், மண்டைதீவு.
16. அ. அனோஜினி, சாளம்பன், ஆண்டாங்குளம்.
17. செ.த. பெனில்டஸ் தற்குருஸ், பருத்திப்பண்ணை, தலைமன்னார்.
18. அ. ஸ்டெலா மேரி, பழைய துட்டுவாகை, நேரியகுளம்.
19. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
20. கே. மேரி பிரபானிஸ், சின்னக்கடை, மன்னார்.
21. அ. அனற் நிவேதா, அச்சங்குளம், நானாட்டான்.
22. ம. மரிய ஷியா, 121/20 நெளுக்குளம், வவுனியா.
23. பி. நித்தியானந்தன் குருஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
24. ஜெயக்குமார் அமல நாயகி, பூலார் குடியிருப்பு, தலைமன்னார்.
25. நா. சங்கிதா, ஆத்திக்குளி, அளவக்கை.
26. டி. சஞ்சனா, இல.109, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
27. எ. டேமிதன், சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
28. கு. ஜான்சன், கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
29. ஆர். யதுஸ்கா, ஒல்லி மோட்டை, சாவற்கட்டு, மன்னார்.
30. ச. மெடோனா, மஞ்சுவராயர் கட்டையடம்பன், மடுவீதி.
31. எஸ். றெஜினோ ஜெயமணி, கங்காணிதீவு, நானாட்டான்.
32. எ. றொசானி, அடம்பன்.
33. ச. கனிஸ்ரா, குருவால், வட்டக்கண்டல்.
34. திருமதி டி.எஸ் லீலாவதி, இல. 76.100 சாந்திபுரம், மன்னார்.
35. கு. மேரி ஜெனிற்றா, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
36. மு. இருதயராணி, சிலாவத்துறை, முல்லைத்தீவு.
37. பி. லுக்ஸினி சோசை, தோமஸ்புரி, வங்காலை.
38. ரஜீவன் கெயில் குலாஸ், யூட்ஸ் வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
39. ஜெ. லோறன்ஸ் சோ. கூஞ்சு, தலைமன்னார் கிராமம்.
40. எல். லெயோதின் குலாஸ், தோமஸ்புரி, வங்காலை.
41. எஸ். சஜீவன், தரவன்கோட்டை, மன்னார்.
42. நி. ஆன் நிரோஷா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
43. ஆர். தனுஜா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
44. சிபோன் ஜிரான்சிஸ்கா, 100 வீட்டுத்திட்டம். முத்தரிப்புதுறை.
45. செமமாலை பீற்றர், பட்டித்தோட்டம், மன்னார்.
46. எம்.திவ்வியா, வைரவ நல்லாயன் இல்லம், கணேசபுரம் வவுனியா.
47. செ. நவீந்திரன், ஹென்றிஸ் கல்லூரி, இளவாலை.
48. அ. நோயல் ஸ்ரிபினஸ், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
49. பி. நிவேதன், பட்டித்தோட்டம். மன்னார்.
50. ஜி. ஆர். மேவின், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

## இல.142 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[01] | சி | கூ | றி | ப் | க் | கி[16] | க் | ரு | நெ[09] |
| ர் | இ[02] | றை | ம[14] | க | ன் | ண் | கு | து | து[18] |
| வ[13] | ல் | ல | ன | க் | ன் | ண | க் | பே[22] | ணி |
| ம் | ல | டு | ம் | மி[21] | ளி | ம | னா | * | வோ |
| கு | ம் | தோ | ப[04] | ரி | வு | ண | உ[10] | ம் | டி |
| ங் | த | த் | வை[11] | னே | ட | உ[12] | உ[17] | லா | ரு |
| ர | ம் | ர | வோ | ட | க[05] | ரை | யி | ல் | ங் |
| இ[19] | * | கா | ய | பா[25] | ட் | * | ரை | எ[23] | க |
| அ[06] | மை | தி | து[20] | ர் | டி | உ[17] | ங் | க | ள் |
| ல | ல் | அ[08] | ள | வை | யா | ல் | று | ன் | செ[15] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.143ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு ஒகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## புனிதரின் பாதையில்..........

09ஆம் பக்கத் தொடர்ச்சி

அஃது "ஜெபமும் உழைப்பும்" என்பதே. இதுவே இந்தச் சபையின் குறிக்கோள். இவ்வொழுங்கை இன்றைக்கும் துறவிகள் அல்லாதவரும் கடைப்பிடித்தால் மானிட முன்னேற்றத்திற்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கும்.

புனித பெனடிக்ட் தனிமையை நாடினாலும், அடிக்கடி மக்களைச் சந்திக்கும் பழக்கத்திலும் இருந்தார். நோயாளிகளைக் குணமாக்கினார். வறுமையில் உழன்றவர்களுக்குப் பொருளுதவி அளித்தார். ஏழைகளுக்கு உணவு வழங்கினார். பலமுறை இறந்தோரை இவர் உயிர்ப்பித்திருக்கின்றார். தமது இறப்பை 6 நாட்களுக்கு முன்னறிவித்தார். தனக்கென்று கல்லறைக் குழி தோண்டச் செய்தார். வழி உணவாக திருவுணவு பெற்றபின், சிற்றாலயத்தில் நின்று செபித்துக்கொண்டிருக்கும்போது, தமது கைகளை இவர் மேலே உயர்த்தவும் உயிர் பிரிந்தது.

"உங்களோடிருந்தபோது, நாங்கள் சோம்பித் திரியவில்லை. உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி பிழைப்புக்கு இராப்பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம். உங்களுக்கு முன்மாதிரியாய் இருக்கவே அப்படிச் செய்தோம். உங்களுள் சிலர் எவ்வேலையும் செய்யாமல் இங்குமங்கும் சோம்பித்திரிந்து, பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகின்றோம். இத்தகையோர் தங்கள் உணவுக்காக உழைக்க வேண்டுமென்று கட்டளையிட்டு அறிவுறுத்துகிறோம்."

### சிந்தனைக்கு

புனித பெனடிக்ற்தான் திருவழிபாட்டு முறைக்கு அடித்தளமிட்டார். சரியான ஆராதனைமுறை என்பதை இன்றைக்கும் இவரது சபையினர் காட்டும் வழியிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். "திருவழிபாட்டு முறையில் இயேசுக்கிறிஸ்துவே தமது குருத்துவப் பணியை நிறைவேற்றுகிறார். இதில் புலன்களால் உணரக்கூடியவிதத்தில் மனிதர்களைப் புனிதப்படுத்தும் திருப்பணி நடைபெறுகிறது. அதாவது தலைவரும் உறுப்பினர்களும் சேர்ந்து பங்கு ஏற்கின்றோம். இதிலிருந்து புலனாவதென்ன? ஒவ்வொரு திருவழிபாட்டு நிகழ்ச்சியும் மற்றெல்லா நிகழ்சிகளையும்விட மேலான இடம்பெற்றுள்ளது." (சங்க ஏடுகள் : திருவழிபாடு, எண்.7)

## தவறுக்கு வருந்துகின்றோம்

கடந்த யூன் மாத மன்னாவில் 16ஆம் பக்கத்தில் அமரர் திரு. எலியஸ் செபமாலை பிகிராடோ (சம்மாட்டி) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியின் இறுதிப் பகுதிகள் கணனி எழுத்து மாறுபட்டதால் ஆங்கிலத்தில் பதிவாகியுள்ளது. இதற்காக வருந்துகிறோம். அதன் தமிழ் வடிவம் கீழே தரப்படுகிறது.

*இவரின் பிரிவால் துயருறும் :*
*அன்பு மனைவி, பாசம்நிறை பிள்ளைகள்,*
*மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ..............

11ஆம் பக்கத் தொடர்ச்சி

கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எஸ். லோகநாதன், இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் (வவுனியா), பாடாசிரியர் மாணிக்கம் ஜெகன் (வவுனியா) ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்விழாவிற்கான வரவேற்புரையை தமிழ்ச் சங்க உறுப்பினர் கவிஞர் ஜே. அமல்ராஜ் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் எழுத்தாளர் எம். சிவானந்தன் அவர்களும், நூல் மதிப்பீட்டுரையை வவுனியாவைச் சேர்ந்த பாடாசிரியர் தர்மலிங்கம் பிரதாபன் அவர்களும், வாழ்த்துக் கவியை கவிஞர் ஜே. ஆர். மயூரன் அவர்களும் வழங்கினர். அறிவிப்புத் துறையில் பல தேசிய விருதுகளைப் பெற்ற மன்னார் அறிவிப்பாளர் திரு. அருள்ராஜ் அவர்கள் இவ்விழாவின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

## 48வது உலக தொடர்பாடல் தினம்...

1ஆம் பக்கத்தொடர்ச்சி

நவீன தொடர்பாடல் சாதனங்களின் ஆக்கபூர்வமான பயன்களை விளக்கும் அதேவேளையில் இதன் தீமையான பக்கங்களைச் சுட்டிக்காட்டி மக்களை - குறிப்பாக இளையோரை எச்சரிப்பதும், அறிவுறுத்துவதும் பெற்றோர், பெரியோர், குருக்களின் கடமையாகும்.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து வெளிவரும் மன்னா பத்திரிகையை எல்லாக் குடும்பங்களும் வாங்கி வாசித்து பயனடையும்படி ஊக்குவிக்குமாறும், பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் கொடுத்து ஒத்துழைக்கும்படி அறிவுறுத்தும்படியாகவும் பங்குத்தந்தையர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

கத்தோலிக்க திருச்சபையால் சிறப்பிக்கப்படும் 48வது உலக தொடர்பாடல் தினத்திற்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "எதிர்கொள்ளுதலின் உண்மையான பண்பாட்டுப் பணியில் தொடர்பாடல்" (Communication at the Service of an Authentic Culture of Encounter) என்ற தலைப்பில் தனது செய்தியை வெளியிட்டுள்ளார். இந்தச் செய்தியின் முழு வடிவத்தை 6ஆம் பக்கத்தில் காணலாம்.

## கைதிகள் சமூகத்தில் மீண்டும் ......

9ஆம் பக்கத் தொடர்ச்சி

இது தனிநபரையும் சமூகத்தையும் பாதிக்கும் என்றும் திருத்தந்தை கூறினார். இறைவன் நம்மை இந்த வழியில் நடத்தவில்லை என்றுரைத்த திருதந்தை, நாம் ஒப்புரவு அருள்சாதனத்தைப் பெறுவதற்குச் செல்லும்போது இறைவன் நம்மை மன்னிக்கிறார் மற்றும் நாம் அவரோடு செல்வதற்கு நம்மை அழைக்கிறார் என்றும் கூறினார். நாம் பலவீனமானவர்கள் என்பதை இறைவன் நினைவுபடுத்துகிறார். எனவே ஒப்புரவு அருள்சாதனத்தைப் பெறச்செல்வதற்கு சோர்வடையக்கூடாது என்றும் கூறிய திருத்தந்தை, இச்சந்திப்பின் இறுதியில் கைதிகளின் குடும்பங்கள் இறைவனின் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்
- பதிப்பாசிரியர்

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
01
1947



உதிர்வு
18
07
2004

### திரு. ப. அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)
(முருங்கன் கமம், முருங்கன்.)

*"சீவியத்தில் உம்மை நேசித்தோம்.*
*மரணத்திலும் உம்மை மறவோம்"*

அன்பிற்கு நிகரான எங்கள் ஐயாவே!
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய் விளங்கியவரே!
ஆண்டு பத்து ஆனாலும் உங்கள் நினைவு அழியாது.
அணையாத தீபமாய், அகல் விளக்காய்
எங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் ஒளியேற்றிய நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றுவிட்டீர்கள்?
கதிகலங்கித் தவிக்கின்றோம் ஐயாவே
உங்கள் ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில்
அமைதியுடன் இளைப்பாற வேண்டி மன்றாடி நிற்கும்,
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார் உறவினர்.*

## 23ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
29
08
1924



உதிர்வு
11
01
1991

### திரு. சந்தான் பாவிலு (புலவர்)

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09
04
1928



உதிர்வு
21
07
2004

### திருமதி. பா. சந்தாக் குட்டி

### (புனித யாகப்பர் கோவிலடி, முருங்கன் கமம், முருங்கன்)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம்"

ஆண்டவரைப் பற்றிய நல்லறிவை, அன்போடு ஊட்டிய தெய்வங்களே
தாண்ட முடியவில்லை எம் துன்பத்தை, தவிக்கின்றோம் உம் பிள்ளைகள் இத்தரணியில்
வறுமையின் பிடியில் நாம் வாடினாலும், உம் வற்றாத் அன்பை மறப்போமா?
சிறுமைகள் எம்மை அணுகாமல், சிறப்போடு எம்மை வளர்த்தீரே
தாராள மனத்தோடு இறுதிவரை, நீர் தயங்காமல் பணிகளைச் செய்தீரே
பின்தூங்கி முன்னெழுந்து எங்களை, பேணியே வளர்த்திட்ட பெருந்தகைகளே!
சான்றோர் வரிசையில் நாம் இருக்க, நீர் சத்திய வழிகளைச் சொல்லித் தந்தீர்
அன்பிற்கு இலக்கணமானவரே, ஆண்டவர் அருகில் அமைதி கொள்ளுங்கள்!
*உம் பிரிவால் துயருறும்:-*
மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள்.

## முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான ..........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அளுத்கம மற்றும் பேருவளையில் - முஸ்லிம் சமூகத்திற்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையைத் தமிழ் சிவில் சமூக அமையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. வன்முறையில் இறந்தோரின் குடும்பத்தினருக்கு எமது இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்வதோடு இந்தக் கடினமான வேளையில் முஸ்லிம் சமூகத்தினருக்கு எமது முழுமையான சகோதரத்துவ ஆதரவையும் விளங்கிக்கொள்ளலையும் வெளிப்படுத்துகிறோம்.

### பாதுகாப்புத் தரப்பே காரணம்

இந்தத் தாக்குதல்களுக்குக் காரணமான பிரதான காரண கர்த்தாக்கள் இன்னும் கைதுசெய்யப்படாமல் இருப்பதையிட்டு கலக்கமடைகின்றபோதிலும் நாம் ஆச்சரியப்படவில்லை. இந்தத் தாக்குதல்களுக்கு மூலகாரணமாக இருந்தோர் பாதுகாப்புத்துறையின் மேலிடத்தோடு நெருக்கமாக இருப்பவர்கள் என்பதால் நாம் ஆச்சரியப்படவில்லை.

இதில் ஆச்சரியப்படாமைக்கான மற்றொரு காரணம் இத்தகைய வன்முறைகள் முன்னர் இடம்பெற்றபோதெல்லாம் சட்டத்தின் மௌனம் தொடர்ந்து நிலவிவந்தமையேயாகும். இது இலங்கை வரலாற்றின் ஒரு அம்சமாகும்.

### திட்டமிடல் செயல்

இவை இயல்பாக (திட்டமிடாமல்) நடைபெற்ற ஒன்றாகவோ ஒரு புதிய நிகழ்வாகவோ விளங்கிக்கொள்ளப்படக்கூடாது. தாக்குதல்களின் ஆரம்பக்கட்டத்தில் கிடைக்கப்பட்ட, நன்கு உய்த்தறியப்பட்ட செய்திகள் இந்தத் தாக்குதல்களை நடத்திய சிங்களக் காடையர் கும்பல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸாரோ, விசேட அதிரடிப்படையினரோ எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

நீண்ட காலமாக சிங்கள பௌத்த அரசினால் இந்த நாட்டின் ஏனைய சமூகங்கள்மீது சமூக, கலாசார, அரசியல், பொருளாதார ரீதியாக முன்னேறக்கூடாது; அதற்கு இடமளிக்க கூடாது என்பதை நோக்கமாகக்கொண்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட தாக்குதல்களின் ஓர் அங்கமாகவே அளுத்கமவில் நடந்த தாக்குதல்களும் பார்க்கப்பட வேண்டும். இந்தத் தாக்குதல்களின் காரணகர்த்தாக்கள் சட்டத்தின்முன் கொண்டுவரப்படுவது முக்கியம்.

### புரையோடிய பிரச்சினை

ஆனால் அது போதுமானதாக இருக்காது. இந்தப்பிரச்சினை ஒரு குறிப்பிட்ட அமைப்புத் தொடர்பானதோ அல்லது ஒரு கட்சி தொடர்பானதோ அல்ல. இலங்கையில் ஒரு வேரோடிப்போன பிரச்சினை. இது விளங்கப்படாவிட்டால், இதில் மாற்றம் வராவிட்டால் அளுத்கமவில் நடந்தவை இவ்வாறான தாக்குதல்களின் வரலாற்றின் முடிவான அத்தியாயம் அல்ல என்றே நாம் கருதுகிறோம். அளுத்கம எமக்கு ஞாபகப்படுத்தும் இந்தச் சிக்கலான புரிதலை விளங்கிக்கொள்ளவும் அதன் அடிப்படையில் செயற்படவும் அனைவரையும் வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அண்மைக்கால முக்கிய சந்திப்புக்களின் நினைவுகள்





கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி எலிசபெத் மகாராணித் தம்பதியரை வத்திக்கானில் சந்தித்தபோது





கடந்த மார்ச் 27ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை வத்திக்கானில் சந்தித்தபோது




கடந்த மே மாதம் 26ஆம் திகதி அன்று இஸ்ரவேல் பிரதமரை யெருசலேமில் சந்தித்தபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் இறுதி நாட்களின் அனுபவங்கள் ‘உயிர்ப் பதிவு’ என்ற நூலாக வெளியீடு











யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் போரின் இறுதி நாட்களில் மக்களோடு இருந்து தான் பெற்ற போர்க்கால துன்பகரமான, பயங்கரமான அனுபவங்களை ‘உயிர்ப்பதிவு’ என்ற பெயரில் நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூல் வெளியீட்டு விழா கடந்த 16.06.2014 அன்று மாலை 4.00 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ் திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ் குருக்கள் மன்றத் தலைவர் அருட்திரு. இ. ஸ்ரலின் அடிகளார் தலைமை தாங்கினார். யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் போர் இலக்கியங்கள் தொடர்பான சிறப்புரையை மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். யாழ் மறைமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு. மங்களராஜா அடிகளார் ஆசியுரை வழங்கினார். இந்நூலுக்கான நயப்புரையை அருட்திரு. இ. ரவிச்சந்திரன் அடிகளார் வழங்கினார். இந்நூலை மன்னார் கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம்.

### இன, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி

## மன்னாரில் பல்சமய வழிபாடு





மன்னார் சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 25.6.2014 புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு மன்னார் பொது விளையாட்டரங்கில் பல்சமய வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் சர்வமத அமைப்பின் இணைத்தலைவர்களான சிவஸ்ரீ மஹா எம். தர்மகுமார சர்மா குருக்கள், மௌலவி எஸ். ஏ. எம். அஸீம், சங்கைக்குரிய விமலரத்தின தேரர், அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை உட்பட இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த மதகுருக்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். மன்னார் ஆர். பி. ஆர். நிறுவனம் இந்நிகழ்வுக்கான அனுசரணையை வழங்கியிருந்தது. நான்கு மதங்களைச் சார்ந்தவர்களால் தனித்தனியாக இறைவழிபாடு செய்யப்பட்டது. இவ்வழிபாட்டின்போது இன, மத நல்லிணக்கத்திற்காக இறைவனிடம் பிரார்த்தனைகள் ஏறெடுக்கப்பட்டன. பிரார்த்தனைகளோடு சேர்ந்து ஒவ்வொரு மதத்தலைவர்களினால் அருளுரைகளும் வழங்கப்பட்டன.

பல்சமய வழிபாட்டின் இறுதியில் மன்னார் சர்வமதப் பேரவையினால் இலங்கை ஜனாதிபதிக்கு மன்னார் அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்படவிருந்த மகஜர் வாசிக்கப்பட்டது. “முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான தாக்குதலை மன்னார் சர்வமதப் பேரவை கண்டிக்கிறது!” என்ற தலைப்பிலான இந்த மகஜரை மன்னார் சர்வமதப் பேரவையின் செயலாளர் ஜனாப் மக்கள் காதர் வாசித்தார். இந்நிகழ்வின் நன்றியுரையை ஆர். பி. ஆர் நிறுவனத்தின் இணைப்பாளர் திரு. செல்வானந்தராஜா வழங்கினார். பின்னர் மன்னார் சர்வமதப் பேரவையின் இணைத்தலைவர்களான நான்கு மதங்களின் தலைவர்கள் மன்னார் செயலகத்திற்குச் சென்று ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜரை மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

கையளிக்கப்பட்ட மகஜரின் முழு வடிவத்தை 11ஆம் பக்கத்தில் காணலாம்.

# நீங்காத நினைவுகள்

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 14 12 1949

உதிர்வு: 21 07 2013



**திருமதி. ஜெபநேசன் விக்ரோறியாள்**

(மாந்தை மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவி, ஓய்வுபெற்ற மாந்தை மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்)

(காத்தான்குளம், வட்டக்கண்டல்.)

“சீவியத்தில் உம்மை நேசித்தோம்.
மரணத்திலும் உம்மை மறவோம்”

அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல் தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் ஒன்று ஆனதம்மா ஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து
வளர்த்து பாரினிலே உயர வைத்தீர்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும் :
கணவன், பிள்ளைகள், மருமகன்.

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 08 1944

உதிர்வு: 24 07 2013



**திரு. சக்கரியாஸ் சந்தான் டயஸ்**

(தாழ்வுபாடு, மன்னார்.)

தலப்பா கட்டி வலை இழுத்து தங்கமீன் கண்டவரே.
உங்க சொந்தம் வந்திருக்கு உத்தமரே எங்கு சென்றீர்?
கொஞ்சித் தாலாட்ட உம் குழந்தை மனம் யாருக்குண்டு?
நிறைந்த மனசுக்காரர் உம்மை நாம் இழந்ததேனோ?

தூக்கம் கலைந்துவிடும் உம் துயரம் கேட்டாலே
ஏக்கம் கலைந்துவிடும் எம் அப்பா உம்மாலே
மயக்கம் கலைந்துவிடும் உம் மந்திரச் சொல்லாலே
தயக்கம் ஏதுமில்லை சத்தியமாய் வந்திடுவீர்!

ஆண்டுகள் நூறு கடந்தால் என்ன?
அடுத்தடுத்து நாம்வேறு பிறப்பெடுத்தால் என்ன?
அன்றும் இன்றும் என்றும் மாறாது உம் அன்பு.
உம் ஆன்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

### 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 29 10 1997

உதிர்வு: 14 07 2009



**செல்வி. குமார் ரினுஷா லக்ஷி**

(எமில்நகர், மன்னார்.)

காலத்தின் வேகத்தில் கடந்தன ஆண்டுகள் ஐந்து!
நாம் இன்னும் நினையாமல் போவோமோ உனைமறந்து
ஈராறு வருடம்தான் எம்மோடு உன் வாழ்வோ?
அதை ஏற்கத்தான் முடியுமோ எம்மாலே?

அன்று உன் பிரிவுகண்டு நாம் அடைந்த மனத்துயரம்
இன்னும் மறையாமல் எம் மனதோரம் உள்ளதே!
காலங்கள் மாறினும் எம் கவலைகள் மாறாது
காட்சிகள் தோன்றினும் உன் புன்னகை மறையாது.

இரக்கம் என்னும் செல்வம் அது அதிகம் உன்னிடம்
எம் செல்வம் உனக்காய் இரஞ்சுகிறோம் இறைவனிடம்.
மலர் உதிர்ந்தாலும் மணம் வீசும் நார்போல
நீ மறைந்தாலும் மாறாது எம் பாசம்.

உம் பிரிவால் துயருறும் : அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், அன்ரிமார், அத்தை, மாமிமார் மற்றும் உன் அன்பு உறவுகள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org